வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk மலர் : 03 06.07.2022 செவ்வாய்க்கிழமை இதழ் : 212 பக்கங்கள் : 16




# பதவி விலக தயார்!

## பிரதமர் ரணில் சபையில் அறிவிப்பு



கொழும்பு, ஜூலை. 06

**“நாட்டை கட்டியெழுப்பக்கூடிய உரிய வேலைத் திட்டத்தை எந்த கட்சியாவது, முன்வைத்தால், பிரதமர் பதவியில் இருந்து விலக நான் தயார்.”**

**-இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று விசேட உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

“தமது கட்சிக்கு ஆட்சி வழங்கப்படும் பட்சத்தில், 6 மாத காலத்தில் நாட்டை வழமைக்கு கொண்டு வருவதாக ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க அறி வித்துள்ளார்.

15

## சாதாரண, உயர்தரத்துக்கான பரீட்சை திகதிகள் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 06

இந்த வருடத்துக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தர, சாதாரணதர மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைகள் இடம் பெறும் திகதிகளை கல்வி அமைச்சு அறிவித்துள் ளது.

2022 ஆம் ஆண்டுக் கான உயர் தரப் பரீட் சைகள் எதிர்வரும் நவம்பர் 28 முதல் டிசெம்பர் 23 ஆம்

15

## ரணில்-சஜித் இடையே நேற்று சபையில் கடும் வாக்குவாதம்!

கொழும்பு, ஜூலை. 06

பாராளுமன்றத்தில் நேற்று பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வுக்கும் இடையே கடும் வாக்குவாதம் இடம்பெற்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் பொருளா தார நெருக்கடி நிலைமை தொடர்பில் தெளிவு படுத்தி சபையில் உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சித்

15

## எரிபொருள் வரிசையில் தொடரும் மரணங்கள்!

### பொரளையில் 60 வயது நபர் நேற்று உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை. 06

எரிபொருள் வரிசையில் காத்திருந்த நிலையில் உயிரி ழக்கும் சம்பவங்கள் தொடர்ந்து வரும் நிலையில் நேற் றும் மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பொரளையில் எரிபொருள் வரிசையில் காத்திருந்த 60 வயதுடைய நபரொருவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

## மக்காவில் தமிழிலும் சொற்பொழிவு!

ரியாத், ஜூலை 06

இஸ்லாமியர்களின் முக்கிய புனித தலங்களில் ஒன்றான மக்காவில் இனி தமிழிலும் அரஃபா நாள் சொற்பொழிவு ஒலிபரப்பப்படவுள்ளது.

இஸ்லாத்தின் புனித நாட்களில் ஒன்றான அரஃ பா நாள் பிரசங்கத்தின் மொழிபெயர்ப்பு ஏற்கனவே 10 மொழிகளில் ஒலிபரப்பப்படுகிறது. இந்நிலை யில், தமிழ் உட்பட 4 மொழிகளில் இனி சொற்பொழிவு மொழிபெயர்க்கப்பட்டு ஒலி பரப்பப்படும் என்று மக்கா- மதீனா புனித

15

## நாணய நிதியத்துடன் நடந்த பேச்சு சாதகமாக அமைந்தது

### சபையில் கூறினார் பிரதமர்

கொழும்பு, ஜூலை. 06

பொருளாதார வீழ்ச் சிக்கு மத்தியில் சர்வதேச நாணய நிதியத்துடன் நடத்தப்பட்ட பேச்சுகள் சாதகமான நிலையை அடைந்துள்ளதாக பிரத மர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று விசேட அறிக்கை ஒன்றை சமர்ப்பித்த அவர், 2023ஆம் ஆண்டு, நாடு பாரிய பிரச்னைகளுக்கு முகங்கொடுக்கவேண்டி யிருக்கும் என்று குறிப்பிட்டார்.

இந்தநிலையில்

15

## அனைத்து கட்சி அரசு அமைக்க கிரியெல்ல தலைமையில் குழு!

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பங்கேற்பு

கொழும்பு, ஜூலை 06

அனைத்துக் கட்சி அரசாங்கத்தை நிறுவுவது தொடர்பான செயல்பாடு களை முன்னெடுக்க, பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தலைமையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட எதிரணியின் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்றை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டுள் ளது.

எதிரணி பிரதிநிதிகளின் பங்கேற்புடன் நேற்று பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற கலந்துரையாடலில், இந் தத் தீர்மானம் எட்டப் பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு, ஐக்கிய மக்கள் சக்தி, சிறீ லங்கா சுதந் திரக் கட்சி, உள் ளிட்ட கட்சிகளு டன், அரசாங்கத்தி

15

## பாராளுமன்றத்துக்கு வந்தார் ஜனாதிபதி ‘கோ ஹோம் கோட்டா’ என்றது எதிரணி!

### இதனால் 10 நிமிடங்கள் சபை ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை. 06

தனக்கு எதிரான மக்கள் போராட்டங் கள் தீவிரமடைந்ததை அடுத்து நீண்ட நாட்களாக வெளியே தலைகாட்டாமல் இருந்து வந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நேற்று பாராளுமன்ற அமர் வில் கலந்துகொண்டார்.

நேற்று முற்பகல் 10 மணிக்கு பாரா ளுமன்றம் கூடிய நிலையில், 10.05 மணி யளவில் ஜனாதிபதி சபைக்குள் பிரவேசித் தார்.

இதன்போது நாட்டின் பொரு ளாதார நிலைமை மற்றும் அது தொடர்பான வேலைத்திட்டங்

15

## பயங்கரவாத தடைச் சட்டத்தை தக்கவைக்கவா கரும்புலி கதை?

### சபையில் கஜேந்திரன் எம்.பி. கேள்வி



கொழும்பு, ஜூலை. 06

பயங்கரவாத தடைச்சட்டத்தை தக்க வைத்துக்கொள் வதற்காகவே அரசால் கரும்புலி தாக்குதல் கதை கட்ட விழ்த்துவிடப்பட்டுள்ளது என்று தமிழ் தேசிய மக்கள் முன் னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந் திரன் குற்றஞ்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையி லேயே அவர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார்.

15

## ஜனாதிபதியும் அரசும் பதவி விலகவேண்டும்

### கர்தினால் மல்கம் ரஞ்சித் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை. 06

தற்போதைய நெருக் கடிக்கான பொறுப்பை ஏற்றுப் பதவியில் இருந்து விலகுமாறு ஜனாதிபதி மற்றும் அரசிடம் கொழும்பு பேராயர் கர்தி னால் மல்கம் ரஞ்சித் வேண்டுகோள் விடுத்துள் ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் அவர் இதனை வலி யுறுத்தினார்.

தற்போதைய அரசுக்கு இனியும் ஆட்சியில் இருக்க தார்மீக உரிமை இல்லை என்று கர்தினால் கூறி னார்.

15



## இப்படியும் நடக்கிறது...!

நாட்டில் டொலர் கையிருப்பு குறைந்துகொண்டு போய்க்கொண்டிருந்த காலம் அது.

தினசரி காலையில் ஜனாதிபதிக்கு டொலர் கையிருப்புக் குறித்து அவரின் செயலாளராக இருந்த டி. பி. ஜெயசுந்தர தகவல் தெரிவித்துக் கொண்டிருந்தார்.

வேகமாகக் குறைந்து கொண்டிருந்த கையிருப்பை, குறையும் வேகத்தைக் குறைக்க வேண்டும் என்பதை ஜெயசுந்தர அடிக்கடி ஜனாதிபதிக்கு எச்சரிக்கை செய்துகொண்டிருந்தாராம்.

மகிந்த ஜனாதிபதியாக இருந்தபோது எட்டு ஆண்டுகளுக்கும் மேலாக திறைசேரியின் செயலாளராக இருந்தவர் இந்த டி. பி. ஜெயசுந்தர. இதனாலேயே நாட்டின் பொருளாதார நிலைமையை தெரிந்துகொண்டதால் அவரை கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியானதும் அவரின் செயலாளராக நியமித்திருக்கலாம்.

தினமும் காலையில் ஜனாதிபதியைச் சந்திக்கும் அவரின் செயலாளர் டி. பி. ஜெயசுந்தர, குறைந்துகொண்டு செல்லும் டொலர் கையிருப்பைத் தக்க வைக்க என்ன செய்யலாம் என்று யோசனை கேட்டபோது, அவசியமற்ற பொருட்களின் இறக்குமதியை நிறுத்துவதற்கு யோசனை தெரிவித்தார் அவர். வாகனங்கள் இறக்குமதி முற்றாக நிறுத்தப்பட்டது. இப்படி பார்த்துப் பார்த்து டொலர் வெளியேற்றத்தைத் தடுக்க முயன்று கொண்டிருந்தார்கள்.

ஆனால், அப்படியிருந்த போதிலும் டொலர் கையிருப்பு குறையும் வேகத்தை கட்டுப்படுத்த முடியவில்லை.

ஒரு கட்டத்தில் உர இறக்குமதிக்கும் எவ்வளவு டொலர்கள் செலவாகின்றன என்ற கணக்கை ஜெயசுந்தர போட்டுக் காட்ட, அதனையும் தடை செய்ய முடிவுசெய்யப்பட்டது.

தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இயற்கை விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்த ஜனாதிபதியும், அதனைக் காரணமாக வைத்து உர இறக்குமதியைத் தடைசெய்ய முடிவெடுத்தார்.

உர இறக்குமதியை தடை செய்வதால், டொலர் கையிருப்பு குறையும் வேகத்தை கட்டுப்படுத்தலாமே தவிர, டொலர் கையிருப்பு குறைவதை தடுக்கமுடியாது என்பதும் அவர்களுக்கு தெரியாததல்ல.

ஆனால், டொலர் கையிருப்பு முற்றாக முடிந்துவிட நாடு, பாரிய நெருக்கடியை எதிர்கொள்ள நேர்ந்தபோது, உர இறக்குமதியை தடை செய்ததாலேயே இந்த நெருக்கடி ஏற்பட்டதாகவும், ஜனாதிபதியின் இந்த தவறான முடிவு தான் அதற்கு காரணம் என்றும் எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தின. இன்றுவரை அது தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றது.

அன்று அவர் அவ்வாறு தடை செய்யாமல் விட்டிருந்தாலும்கூட, சில மாதங்களிலேயே உரத்தை இறக்குமதி செய்ய டொலர் துளிக்கும் இருந்திருக்காது. இதனால் தானாகவே உரம் இறக்குமதியும் முடங்கியிருக்கும். அப்படியொரு நிலை ஏற்படுகின்றபோது, அதன் பழி ஜனாதிபதியின் தலையில் வந்திருக்காது.

அதாவது, உரத்துக்கான இறக்குமதிக்கு அனுமதி இருந்திருந்தாலும், அதனை இறக்குமதி செய்ய டொலர் இருந்திருக்காது. இப்போதும், அதேபோன்ற ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது.

எரிபொருள் இறக்குமதிக்கு தடை இல்லை. ஆனாலும் எரிபொருளை இறக்குமதி செய்ய டொலர் இல்லாததால் எரிபொருள் நெருக்கடி தொடர்கின்றது.

இருக்கும் கையிருப்பை அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரம் விநியோகிப்பது என்று முடிவெடுத்த அரசாங்கம், அதனை சிக்கனமாக பயன்படுத்தி சில நாட்களை சமாளிக்க முயன்று கொண்டிருக்கின்றது.

அடுத்த சில நாட்களில் வருகின்ற எரிபொருட்களையும் இதேபோன்று அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் விநியோகித்தால் மட்டுமே சமாளிக்கவும் முடியும், மக்களிடையே கொந்தளிப்பு இன்றி விநியோகிக்கவும் முடியும்.

கையிருப்பில் உள்ள எரிபொருளின் அளவு குறைந்து கொண்டே சென்று கொண்டிருப்பது குறித்து ஜனாதிபதிக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கவேண்டும்.

அதுதான் அவர் இப்போது, அத்தியாவசிய சேவைகளுக்கு கொடுப்பதை எப்படிக் குறைக்கலாம் என்று சிந்தித்து, அத்தியாவசிய சேவைகள் பட்டியலை குறைத்திருக்கின்றார் போலும்.

எரிபொருள் விநியோகம், மருத்துவ சேவை, மின்சாரம் வழங்கல் ஆகிய மூன்று துறைகளை மாத்திரமே அத்தியாவசிய சேவையாக பிரகடனம் செய்திருக்கின்றார்.

இனி இந்த மூன்று சேவையினருக்கும் மாத்திரமே எரிபொருள் கிடைக்கலாம். இது உர இறக்குமதியை தடுத்து டொலர் கையிருப்பை பாதுகாக்க முயன்றதுபோல, எரிபொருள் விநியோகத்தை குறைத்து கையிருப்பிலுள்ள எரிபொருளை சில நாட்கள் அதிகமாக பயன்படுத்த உதவலாம். அவ்வளவுதான்.

- ஊர்க்குருவி

# பிரதமராக ரணிலுக்கு மட்டுமல்ல எனக்கும் மக்கள் ஆணை இல்லை!

## சபையில் கூறினார் அநுரகுமார



கொழும்பு, ஜூலை 06

நான் பிரதமர் பதவியை ஏற்றாலும், ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை ஏற்றாலும், அந்த நாற்காலியில் உட்கார உங்களுக்கும் எனக்கும் மக்கள் ஆணை இல்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள் என தேசிய மக்கள் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அநுர திஸநாயக்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

குறைந்த பட்சம் ஆணையுடன் கூடிய பாராளுமன்ற உறுப்பினர் பதவியாவது எனக்கு இருக்கின்றது. ரணில் உங்களுக்கு பாராளுமன்ற உறுப்பினராகும் மக்கள் ஆணைகூட இல்லை என்றும் கூறினார்.

அவ்வாறான ஒருவர் கால வரையறையின்றி பிரதமர் பதவியில் இருப்பது நியாயமா என்றும் அநுரகுமார திஸாநாயக்க கேள்வி எழுப்பினார்.

இலங்கையின் பொருளாதாரத்தை அநுரகுமாரவினால் 6 மாதங்களில் மீட்டெடுக்க முடியுமென்றால், அவரிடம் பிரதமர் பதவியை ஒப்படைக்க தயார் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளு மன்றத்தில் தெரிவித்த கருத்துக்கு பதிலடியாகவே இதனை தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய அநுர,

பிரதமர் தனது அறிக்கையை சூழலுக்கு புறம்பாக எடுத்துக் கொண்டுள்ளார். நாட்டை ஸ்திரப்படுத்த வேண்டும் என்றும், 6 மாத காலத்திற்குப் பிறகு தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டேன். "நான் சொன்னது என்னவென்றால், ஓர் அமைச்சரவை எங்களால் நியமிக்கப்பட வேண்டும், குறுகிய காலத்தில் நாட்டை ஸ்திரப்படுத்த பயன்படுத்த வேண்டும். அதன் பின்னர், 6 மாதங்களில் தேர்தல் நடத்தப்பட வேண்டும். பொதுமக்கள் தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்து புதிய அரசை அமைக்க வாய்ப்பளிக்க வேண்டும்."

"நாம் தேர்தலுக்குச் செல்ல வேண்டியதன் காரணம் இந்தப் பிரச்னையைச் சமாளிப்பதற்காகத்தான். எமக்கு நிலையான அரசாங்கம் மட்டுமன்றி நம்பகமான அரசாங்கம் தேவை"

தற்போதைய பாராளுமன்றத்தின் கீழ் ஸ்தாபிக்கப்படும் எந்தவோர் அரசாங்கத்தின் மீதும் பொதுமக்கள் நம்பிக்கை வைக்க மாட்டார்கள் என ஜே.வி.பி தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# ஜூன் 9 மின்வெட்டு நடைமுறை; இரு பொறியியலாளர் பதவி நீக்கம்!

கொழும்பு, ஜூலை 06

கடந்த ஜூன் மாதம் 9ஆம் திகதி முன் அனுமதியின்றி மின்வெட்டு விதித்தமைக்காகவும், நீர் மின் நிலையங்களுக்கு பதிலாக டீசல் மின் உற்பத்தி நிலையங்களை இயக்கியதற்காகவும் இலங்கை மின்சார சபையின் இரண்டு பொறியியலாளர்கள் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

ஜூன் மாதம் 9 ஆம் திகதி அரசாங்கம் இலங்கை மின்சார திருத்தச் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததை யடுத்து எதிர்ப்பின் அடையாளமாக இருவரும் தன்னிச்சையாக மின்வெட்டுகளை விதித்திருந்தனர்.

இந்தச் சட்டமூலத்தை முன்வைப்பதற்கு எதிராக இலங்கை மின்சார சபை ஊழியர் சங்கங்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப விசாரணைகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதால், கணனி கட்டுப்பாட்டில் உள்ள இரண்டு பொறியியலாளர்கள் நீக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இரண்டு பொறியியலாளர்களின் செயற்பாடுகளினால் நாட்டுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் விஜயசேகர குறிப்பிட்டார்.

இந்த நிலைமையின் அடிப்படையில் தொழிற்சங்கங்கள் மேலும் வேலைநிறுத்தங்களில் ஈடுபடலாம் என்றும் அமைச்சர் கூறினார்.

அரசாங்கம் என்ற ரீதியில் இவ்வாறான செயற்பாடுகளை அனுமதிக்க முடியாது எனவும், இதற்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்படாமல் இருக்க அனுமதிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# மூன்று நாட்களுக்கான மின்வெட்டு அறிவித்தல்!

கொழும்பு, ஜூலை 06

இன்று புதன்கிழமை முதல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை தினமும் 3 மணி நேரம் மின்வெட்டு இடம்பெறவுள்ளது.

இதன்படி, ஏ, பி, சி, டி, ஈ, எவ், ஜீ, எச், ஐ, ஜே, கே, எல், பி, கியூ, ஆர், எஸ், ரி, யூ, வி, டபிள்யூ ஆகிய வலயங்களுக்கு பகல் வேளையில் 1 மணி 40 நிமிடங்களும் இரவில் 1 மணி நேரம் 20 நிமிடங்களும் மின் சாரம் தடைப் படும் எனவும் ஜானக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகர பகுதியில் காலை 6 மணி முதல் 8.30 மணி வரை 2 மணிநேரம் 30 நிமிடங்கள் மின்வெட்டு அமுல்படுத்தப்படுவுள்ளது.

இதேவேளை, எம், என், ஓ, எக்ஸ், வை, இசற் வலயங்களில் காலை 5.30 மணி முதல் காலை 8.30 மணி வரை 3 மணிநேரம் மின்வெட்டு நடைமுறையாகவுள்ளது. (ஐ)

# எட்டி உதைத்த படை அதிகாரி கடமைகளிலிருந்து விடுவிப்பு!

கொழும்பு, ஜூலை 06

ஏரிபொருள் நிரப்பு நிலையத்தில் பொதுமகன் ஒருவரை எட்டி உதைந்து, அட்டூழியத்தில் ஈடுபட்ட லெப்டினன்ட் கேணல் விராஜ் குமாரசிங்கவை விசாரணைகள் முடியும் வரை அனைத்து கடமைகளில் இருந்தும் விடுவித்துள்ளதாக இராணுவம் அறிவித்துள்ளது. (அ)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், ஜூலை 06

உலகெங்கும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமான வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இறை ஆசி வேண்டி பிரார்த்தனை நடைபெறுகிறது.

இந்தப் பிரார்த்தனை வரிசையில் நாளை வியாழக் கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் - தென்மராட்சி - மிருசுவில் வடக்கு மன்னன் குறிச்சி - நெல்லிக்கிணத்தடி தான்தோன்றி கந்தசுவாமி ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ வெ. தில்லையம்பலக் குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் சேவையில் நேரடியாக ஒலிபரப்பாகும். (ஐ)

ஈழநாடு
Eelanadu
06.07.2022 புதன்கிழமை
பிலவ வருடம், ஆணி 22

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# விக்னேஸ்வரனின் கவனத்திற்கு?

சஜித் பிரேமதாஸ தலைமையிலான சர்வ கட்சிகள் கூட்டத்தில் விக்னேஸ்வரன் பங்குகொண்டிருக்கின்றார். தமிழ்த் தேசிய அரசியலைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளிலிருந்து, விக்னேஸ்வரன் மட்டுமே இதில் பங்குகொண்டிருக்கின்றார். விக்னேஸ்வரன் ஏன் பங்குகொண்டார் என்பதற்கு அவரின் கூட்டணியிலுள்ள ஏனைய கட்சிகளிடம் பதிலில்லை. இது தொடர்பில் 'ஈழநாடு' ஆராய்ந்த போது, எங்களுக்கு கிடைத்த பதில் அதுதான். விக்னேஸ்வரன் இதற்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்துப் பேசியிருந்தார். அப்போதும் ஏன் அவர் அவ்வாறு பேசுகின்றார் - அதற்கு பின்னாலுள்ள அரசியல் திட்டம் என்ன? - அப்போதும்கூட, கூட்டணி கட்சிகளிடம் பதிலிருக்கவில்லை.

இப்போது ரணில் விக்கிரமசிங்கவை அகற்ற வேண்டுமென்னும் நிலைப்பாட்டிலிருக்கும் சஜித் பிரேமதாஸவின் அழைப்பை ஏற்றுக் கொண்டு, அங்கு சென்றிருக்கின்றார். ஆனால், தமிழ்த் தேசிய கூட்டமைப்பிலிருந்து எவரும் இதில் பங்குகொள்ளவில்லை. சஜித் பிரேமதாஸவுடன் இணைந்து செயல்படும் ஏனைய கட்சிகள் பங்குகொண்டமையை, தனியாக நோக்க முடியாது. ஏனெனில், ஒரு வேளை, சஜித் பிரேமதாஸ அரசாங்கத்தை அமைத்தால், அவர்களும் அந்த அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருப்பார்கள். இந்தப் பின்புலத்தில் நோக்கினால், விக்னேஸ்வரன் ஒருவர்தான் வெளியாள்.

விக்னேஸ்வரன் என்ன நோக்கத்தில் இதில் பங்குகொண்டார் என்பதற்கப்பால், சர்வ கட்சி அரசாங்கம் ஒன்றைப் பற்றி தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்பவர்கள் சிந்திக்க வேண்டியளவுக்கு நிலைமைகள் மாறிவிட்டனவா? தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியை போக்குவதற்கு சர்வ கட்சி அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்துவதை தவிர வேறுவழியில்லை என்னும் நிலைப்பாட்டை பிரதான எதிர்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி முன்வைத்துவருகின்றது. ஆனால், இதனை சுயாதீன பாராளுமன்ற அணியினர் ஏற்கவில்லை. அதேவேளை பொதுஜன பெரமுனவும் இந்த யோசனையை ஆதரிக்கவில்லை.

ஒருவேளை பலரின் பங்குபற்றலோடு, அப்படியானதோர் அரசாங்கம் உருவாகினால்கூட, அந்த அரசாங்கத்தில் தமிழ் மக்களின் பிரச்னைகள் தொடர்பில் உறுதியான நிலைப்பாடுகள் எவையும் இருக்கப் போவதில்லை. ஏனெனில், இப்படியானதொரு யோசனை வெளிவந்திருப்பதற்குக் காரணம் பொருளாதார நெருக்கடி மட்டுமே! அவ்வாறானதொரு நிலைப்பாடு இல்லாவிட்டால், அந்த சர்வ கட்சி அரசாங்கத்தில் தமிழர்கள் இணைந்து கொள்வதன் பொருள் என்ன - என்னும் கேள்வியெழும். இல்லை.

வடக்கு - கிழக்கை பொருளாதார ரீதியில் முன்னேற்றும் இலக்குடன் தான் நாம் இந்த ஆட்சியில் பங்கெடுக்கின்றோம் என்னும் நிலைப்பாட்டை எவரேனும் முன்வைத்தால், இதுவரை - தமிழ்த் தேசியர்கள் முன்வைத்து வந்த அரசியல் நிலைப்பாடுகளின் பெறுமதியென்னும் கேள்வி எழுகின்றது. 'கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை' - என்றவாறு, அரசியல் நிலைப்பாடுகளை முன்வைக்க முடியாது. ஏதாவது ஒன்றை பற்றித்தான் இறுக்கமான நிலைப்பாட்டை தமிழ்த் தேசியர்கள் என்போர் முன்னெடுக்க வேண்டும். விக்னேஸ்வரன் அவரசப்பட்டு சஜித் பிரேமதாஸவின் கூட்டத்தில் பங்கு கொண்டிருப்பதை நோக்கினால், அவர் அரசியல் ரீதியில் தெளிவாக இல்லையா என்னும் கேள்வி எழுகின்றது. சில விடயங்களை - எல்லோரும் உச்சரிக்கின்றனர் என்பதற்காகத்தான் விக்னேஸ்வரனும் உச்சரிக்கின்றாரா?

வடக்கு, கிழக்கு தமிழர் அரசியலை பிரதிநித்துவம் செய்ய முற்படும், தமிழ்த் தேசியக் கட்சிகளை சேர்ந்தவர்கள் ஒரு விடயத்தில் தெளிவாக இருக்க வேண்டும். அதாவது, தமிழ் மக்களின் சார்பில் முன்னெடுக்கும் நிலைப்பாடுகளை ஒன்றிணைந்து முன்னெடுக்க வேண்டும். தனித் தனியாக முன்னெடுக்கக்கூடாது. ஏனெனில், தமிழ் மக்களிடம் இன்றுள்ள ஒரேயொரு பலம், தமிழ் பாராளுமன்ற உறுப்புரிமை மட்டும்தான். அதுவும்கூட சேர்ந்திருக்கும்போதுதான் ஓரளவு பலமாக இருக்கும். எனவே, தனித் தனியான தீர்மானங்களை மேற்கொண்டால், தமிழ் அரசியலை பிரித்தாள்வதும், மலினப்படுத்துவதும் இலகுவாக இருக்கும். இதனை விக்னேஸ்வரன் போன்றவர்கள் புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும்.

# திருக்கேதீஸ்வரத்தை பாதுகாத்த இலங்கையின் முதலாவது பாதுகாப்பு செயலாளர்!



- அனந்த பாலகிட்ணர் -

இலங்கை சுதந்திரமடைந்த போது "சிறிய இங்கிலாந்து" என்று கூறப்படுமளவுக்கு பொருளாதார ரீதியாகவும், கல்வி மற்றும் அரச நிர்வாகம் என்பவற்றில் மேம்பட்டதாகவும் ஆங்கிலேயரையும் வியக்க வைக்குமளவுக்கு விளங்கியிருந்தது.

இத்தகைய மேம்பட்ட நிலையில் அன்று இலங்கை விளங்கியமைக்கு நாட்டின் சிவில் சேவையில் உயர்தரமான பங்களிப்பை வழங்கிய யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட உயர் அதிகாரிகளே முக்கியமானவர்கள்.

1947ஆம் ஆண்டு இலங்கையின் பாதுகாப்புச் செயலாளராக நியமனம் பெற்ற முதலாவது இலங்கையரே சேர். கந்தையா வைத்தியநாதன் என்பது குறிப்பிடத்தக்கது. பெரிதும் ஆங்கில மோகத்தோடு வாழ்ந்த சேர். கந்தையா வைத்தியநாதன் போன்ற உயர் பதவிகளை வகித்த இலங்கைத் தமிழர்கள் பலரும் சிறந்த சிவபக்தர்களாக விளங்கியிருந்தனர்.

இதற்கு இலங்கை சுதந்திரமடைவதில் முன்னின்ற சேர். பொன் இராமநாதன் அவர்களின் முன்மாதிரியான வாழ்க்கை முறையே முக்கிய காரணமாகும். பிரிட்டிஷாரின் ஆட்சி நிலவிய காலத்திலும் கொழும்பில் கருங்கல்லினால் ஸ்ரீபொன்னம்பலவாணேஸ்வரர் கோயிலை ஸ்தாபித்து தமது சிவபக்தியின் உயர்வை வெளிப்படுத்தியவரே சேர். பொன்னம்பலம் இராமநாதன்.

எனவே, கல்வி மற்றும் சமூக அந்தஸ்தில் எவ்வளவு உயர்வாக இருந்தாலும் சிவபக்தனாக மேம்பட்டிருந்த சேர் பொனனம்பலம் இராமநாதனின் வாழ்க்கையைப் பின்பற்றி தமது மதம், கலாசாரம் என்பவற்றின் மேன்மையைப் பேணுவதில் சேர். கந்தையா வைத்தியநாதனும் அவரைப் போன்று இலங்கையில் உயர் பதவிகளிலிருந்த இந்து சமயத்தவர்களான இலங்கைத் தமிழர்கள் தமது இன, மத அடையாளங்களைப் பாதுகாப்பதில் முனைப்பாக அதேசமயம் ஏனைய மதத்தவர்களையோ, இனத்தவர்களையோ புண்படுத்தாத விதத்திலும் வாழ்ந்திருந்தனர்.

இலங்கை ஒரு சிவபூமி என்பதற்கான ஆதாரமாக நாட்டின் அனைத்து திசைகளிலும் பழமை வாய்ந்த சிவன் கோயில்கள் இருக்கின்றமையை அவதானிக்க முடியும். இலங்கையை ஆண்ட இராவணனும் ஒரு சிவபக்தன் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய சிவன் கோயில்களில் 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரினால் பாடல் பெற்ற இலங்கையிலுள்ள சிவ திருத்தலங்களில் மன்னார் மாதோட்டத்தில் அமைந்துள்ள திருக்கேதீஸ்வரம், திருகோணமலையில் அமைந்துள்ள திருக்கோணேஸ்வரம் என்பவை முக்கியமானவையாகும்.

இலங்கையில் போர்த்துக்கீசரால் 16ஆம் நூற்றாண்டில் திருக்கேதீஸ்வரம் இடர்பாடுகளுக்குள்ளானது. அப்போது அங்கிருந்த ஆதி மகா சிவலிங்கம்கூட ஆலயத்திலிருந்து கிளப்பப்பட்டு கடலில் வீசப்பட்டிருந்தது.

இருந்தபோதிலும் 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆறுமுக நாவலர் போன்ற இந்து மத மறுமலர்ச்சியாளர்கள் திருக்கேதீஸ்வரத்தை ஒரு புராதனமான வழிபாட்டுத்தலமாக மட்டும் கருதாமல் இலங்கையர்கள் மற்றும் சைவத்தமிழர்களின் அடையாளம் என்ற ரீதியில் அதனைப் புனரமைத்தனர்.

ஆறுமுகநாவலர், பசுபதிச் செட்டியார் போன்ற பெரியவர்களால் புனருத்தாபனம் செய்யப்பட்ட திருக்கேதீஸ்வரம், 19ஆம் நூற்றாண்டில் மகா கும்பாபிஷேகத்தை கண்டிருந்தது. அதன்பின்னர் அந்தத் திருத்தலத்தின் வளர்ச்சி படிப்படியாக முன்னனேற்றம் கண்டிருந்தது.

இதன்பின்னர் முழு அளவிலான புனருத்தாரண பணிகள் 1948ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. சுப்பிரமணியம் சிவபாதசுந்தரம் என்ற சைவப்பெரியாரின் திருப்பணிகளுக்கு தோள்கொடுத்தவர்களில் முக்கியமானவரே சுதந்திர இலங்கையின் முதலாவது பாதுகாப்புச்செயலாளராக இருந்த சேர். கந்தையா வைத்தியநாதன். அச்சமயத்தில் மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் பணியாற்றிய இலங்கைத் தமிழர்களும் திருக்கேதீஸ்வர புனருத்தாரணத்துக்கு தாராளமாக உதவியிருந்தனர்.

சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமராக இருந்த டி. எஸ். சேனநாயக்கவின் பொறுப்பிலேயே பாதுகாப்பு அமைச்சும் இருந்தது. 1947ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடையும் முன்னரே 1947ஆம் ஆண்டு பாதுகாப்புச் செயலாளராக இருந்த சேர். கந்தையா வைத்தியநாதன், 1948ஆம் ஆண்டு சுதந்திர இலங்கையின் முதலாவது பாதுகாப்புச் செயலாளராகவும் பதவி வகித்ததோடு 1965ஆம் ஆண்டு வரை அந்தப் பதவியை வகித்திருந்தார்.

பாதுகாப்புச் செயலாளராகவும் பணியாற்றிய அதேசமயம் வெளிவிவகாரத்துறை செயலாளராகவும் சேர். கந்தையா வைத்தியநாதன் பணிபுரிந்தார்.


இத்தகைய பின்னணியில் நாட்டின் பாதுகாப்பு குறித்த விடயங்களை செயல்படுத்தியதோடு திருக்கேதீஸ்வரத்தின் புனருத்தாரணத்தையும் அதன் பின்னர், முதலாவது மகா கும்பாபிஷேகத்தையும் சேர். கந்தையா வைத்தியநாதன் முன்னின்று நடத்தியிருந்தார்.

1971ஆம் ஆண்டிலும் அதனைத் தொடர்ந்து 1976ஆம் ஆண்டிலும் புனருத்தாரண பணிகள் இடம்பெற்று மகா கும்பாபிஷேகங்கள் இடம்பெற்றன. அத்துடன் 2003ஆம் ஆண்டு மண்டலாபிஷேகம் இடம்பெற்றது.

இவற்றையடுத்து இன்று வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கேதீஸ்வரத்தின் மகா கும்பாபிஷேகம் இடம்பெறுகின்றது.

முழுமுதல் கடவுளாகிய சிவபெருமானை அபிஷேகப் பிரியன் என்று குறிப்பிடப்படுவதுண்டு. அவ்வகையில் திருக்கேதீஸ்வர மகா கும்பாபிஷேகம் சிவனாரை பெரிதும் குதூகலப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜூலை - 06 புதன்கிழமை
சுபகிருது வருடம் - ஆனி 21
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : சப்தமி

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
பிரமுகர்களின் ஆதரவுடன் உங்கள் எண்ணம் நிறைவேறும் நாள். உங்கள் செயல்பாட்டின் காரணமாக பணியிடத்தில் பாராட்டப்படுவீர்கள். நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி நிறைவேறும்.

**இடபம்**
அலுவலகத்தில் நீங்கள் விரும்பிய இடத்திற்கு இடமாற்றம் ஏற்படும். பிரபலங்களை சந்தித்து தேவையை நிறைவேற்றிக் கொள்வீர்கள். உங்கள் வசதிக்கேற்ப வீட்டை விரிவுபடுத்தும் முயற்சியில் ஈடுபடுவீர்கள்.

**மிதுனம்**
புதிய முயற்சி ஒன்றில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். நண்பர்கள் ஆதரவாக இருப்பர். நினைத்தவற்றில் ஆதாயம் காண்பீர்கள். உங்களுடைய ஆற்றல் வெளிப்படும் நாள். முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.

**கடகம்**
குடும்பத்தினரின் விருப்பம் அறிந்து செயல்படுவீர்கள். உங்களின் எதிர்பார்ப்பு நிறைவேறும். வாக்கு வன்மையால் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். மகிழ்ச்சியான நாள். குழப்பங்கள் விலகும்.

**சிம்மம்**
உங்களது செயல்கள் இழுபறியாக இருந்தாலும் நடந்தேறும். திருப்பு முனையான நாள். உங்கள் எண்ணத்தில் ஒன்று நிறைவேறும். பெரியவர்களின் வழிகாட்டுதல் பயன் தரும்.

**கன்னி**
வீண் செலவுகளால் நெருக்கடிக்கு ஆளாவீர்கள். மதியத்திற்கு மேல் நிதிநிலை சீராகும். நண்பர்களின் ஒத்துழைப்போடு ஒரு செயலில் ஈடுபட்டு லாபம் காண்பீர்கள். செலவுகள் கட்டுப்படும்.

**துலாம்**
எதிர்பார்த்த நன்மைகளை அடைவீர்கள். இருந்தாலும் பொறுமை தேவை. மதியத்திற்கு மேல் எதிர்பாராத செலவுகளை சந்திப்பீர்கள். நிதானமாக செயல்படவும். செயல்களில் சிரமம் ஏற்படும்.

**விருட்சிகம்**
சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். பொருளாதார நெருக்கடிகளை சமாளிப்பீர்கள். முயற்சியில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் விலகும். எதிர்பாராத வரவு உங்களை மகிழ்விக்கும்.

**தனுசு**
எதிர்காலம் கருதி நீங்கள் மேற்கொண்ட முயற்சி நிறைவேறும். சேமிப்பில் கவனம் செலுத்துவீர்கள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்பார்கள். வேலைப்பளு அதிகரிக்கும்.

**மகரம்**
இரண்டு நாட்களாக இருந்த நெருக்கடி மதியத்திற்கு மேல் விலகும். நிறைவேறாமல் இருந்த முயற்சிகள் மதியத்திற்கு மேல் நிறைவேறும். பணவரவு உண்டு. மனதில் உண்டான சங்கடம் விலகும்.

**கும்பம்**
மதியத்திற்கு மேல் சந்திராஷ்டமம் தொடங்குவதால் அதற்குமுன் பணிகளை முடியுங்கள். காலையில் இருக்கும் உற்சாகம் மதியத்திற்கு மேல் இல்லாமல் போகும். செயலில் சிக்கல் உண்டாகும்.

**மீனம்**
எண்ணியதை அடைந்து மகிழ்வீர்கள். நட்புகள் வழியே நன்மைகள் அதிகரிக்கும். உங்களது சிறப்பை மற்றவர்கள் உணர்வார்கள். விலகிச் சென்றவர்கள் மீண்டும் வருவர். சோதனைகளை சாதனைகளாக்கி மகிழ்வீர்கள்.

# தி.மு.க. அரசை கண்டித்து பா.ஜ.க. நேற்று போராட்டம்!

சென்னை, ஜூலை 06

தேர்தல் சமயத்தில் கொடுத்த வாக்குறுதிகளை தி. மு. க. அரசு நிறைவேற்றவில்லை என்று கண்டித்தும், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும், சென்னை வள்ளுவர் கோட்டத்தில் பா. ஜ. கவினர் அந்தக் கட்சியின் மாநில தலைவர் அண்ணாமலை தலைமையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

தமிழகம் முழுவதும் உள்ள மாவட்டத் தலைநகரங்களில், பா. ஜ. க. சார்பில் நேற்று உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

சென்னையில் அண்ணாமலை தலைமையில் நடந்த போராட்டத்தில், பெற்றோல், டீசல் விலை குறைப்பு, எரிவாயு சிலிண்டருக்கு மானியம் குறைப்பு உள்ளிட்ட தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாத தி. மு. க. அரசைக் கண்டித்து, கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

சென்னையில் நடைபெற்று வரும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொண்டர்கள், நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஐ)

# இலங்கையை கண்டிக்காமல் வேடிக்கை பார்க்கிறது அரசு!

## வைகோ குற்றச்சாட்டு

சென்னை, ஜூலை 06

இலங்கைக்கு கண்டனம் தெரிவிக்காமல் மத்திய அரசு வேடிக்கை பார்ப்பது தமிழக மீனவர்களுக்கு இழைக்கப்படும் அநீதி என்று ம. தி. மு. க. பொதுச் செயலாளர் வைகோ கண்டனம் தெரிவித்துள்ளார்.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த இந்திய மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்தது தொடர்பாக அவர் விடுத்த அறிக்கையிலேயே மேற்படி கூறினார்.

மேலும், இலங்கையில் அடைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 68 பேரை விடுவிக்க தேவையான நடவடிக்கை எடுக்கக் கோரி, சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த மார்ச் கடைசி வாரம் விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதிகள், இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதும், அவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் தொடர்கதை ஆகி வருகிறது. இந்த நிலையில், இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 68 தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்திய வெளியுறவு அமைச்சுக்கு உத்தரவிட்டனர். ஆனால், இதை அமைச்சு செய்யவில்லை.

மீன்பிடித் தடைக் காலம் முடிந்து தற்போது மீண்டும் கடலுக்குச் சென்ற மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் இந்திய கடல் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து கைது செய்துள்ளனர். பொருளாதாரத்தில் நிலைகுலைந்து போயுள்ள இலங்கைக்கு, இந்தியா வாரி வாரி வழங்கிய போதும் சிங்கள அரசு, இந்திய மீனவர்களை வேட்டையாடுவதைத் தொடர்ந்துகொண்டே இருக்கிறது.

மத்திய பா.ஜ.க. அரசு, இலங்கை அரசுக்கு உரிய முறையில் அழுத்தம் கொடுத்து, கண்டனம் தெரிவிக்காமல் வேடிக்கை பார்ப்பது தமிழக மீனவர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும். தமிழக மீனவர்களை இந்திய கடல் எல்லைக்குள் நுழைந்து கைது செய்து, இலங்கை சிறையில் அடைக்கும் சிங்கள அரசின் அட்டூழியத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப் போவது எப்போது?"- என்றுள்ளது. (ஐ)

# பொது செயலாளராகிறார் எடப்பாடி பழனிசாமி?

சென்னை, ஜூலை 06

எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறவுள்ள அ. தி. மு. க. பொதுக் குழுவில் கட்சியின் இடைக்கால பொதுச் செயலாளரை தெரிவு செய்வது தொடர்பாக பொதுக்குழு அழைப்பிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அ. தி. மு. கவில் ஓ. பன்னீர் செல்வம் - எடப்பாடி கே பழனிசாமி இடையே கட்சி தலைமை தொடர்பில் தொடர்ந்து மோதல் நீடித்து வருகிறது. இந்நிலையில், எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறவுள்ள அ. தி. மு. க. பொதுக் கூட்டத்தில் ஒற்றைத் தலைமை குறித்து விவாதிக்கப்படவுள்ளது.

இந்நிலையில், கட்சியில் எடப்பாடி பழனிசாமிக்கான ஆதரவு கணிசமாக உயர்ந்துள்ளது. இதனால், அவரை பொதுச் செயலாளராகக் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

இதனிடையே அ. தி. மு. கவில் ஒற்றைத் தலைமை குறித்த தீர்மானங்களை நிறைவேற்றுவது குறித்து நீதிமன்றங்களில் வழக்குகளின் விசாரணையும் இருந்து வருகிறது.

குறிப்பாக, அ. தி. மு. க. ஒற்றை தலைமை விவகாரத்தில் கட்சியின் செயற்குழு, பொதுக்குழு கூட்டத்தில் அறிவிக்கப்படாத புதிய தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு தடை விதித்த சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவை எதர்த்து பழனிசாமி தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு இன்று உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வருகிறது. இந்நிலையில்தான் அதிமுக பொதுக்குழு கூட்டத்தின் அழைப்பிதழ் வெளியாகியுள்ளது.

அதில், "கழக ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் என்ற இரட்டைத் தலைமையை ரத்து செய்து கழகத்தின் அடிப்படை உறுப்பினர்களால் தெரிவு செய்யப்படும் கழகப் பொதுச் செயலாளர் பொறுப்பு குறித்து விவாதித்து முடிவெடுப்பது, கழக இடைக்கால பொதுச் செயலாளர் பொறுப்பை உருவாக்குவது குறித்து விவாதித்து முடிவெடுப்பது, மேலும், கழக இடைக்கால பொதுச் செயலாளரை நடைபெற உள்ள பொதுக்குழுவிலே தேர்வு செய்து அறிவித்தல், பொதுச் செயலாளர் தேர்தல் குறித்து அறிவித்தல்" ஆகியவை குறித்து விவா திக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சிதம்பரம் நடராஜர் கோயிலில் தேர்த் திருவிழா நடைபெற்றது

சிதம்பரம், ஜூலை 06

உலகப்புகழ் பெற்ற சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் கோயிலின் ஆனித்திருமஞ்சன தேர்த் திருவிழா நேற்று இடம்பெற்றது.

சிதம்பரம் கோயிலின் தரிசன உற்சவ விழா ஆண்டு தோறும் நடந்து வருகிறது. இந்த ஆண்டுக்கான விழா கடந்த 27ஆம் திகதி காலை கொடியேற்றத்துடன் தொடங்கியது.

தொடர்ந்து திருவிழாக்கள் இடம்பெற்று வந்த நிலையில், முக் கிய திருவிழாக்களில் ஒன்றான தேர்த்திருவிழா நேற்று நடைபெற் றது.

அதிகாலை ஸ்ரீ நடராஜர், சிவகாமி அம்மன், விநாயகர், சுப்பிர மணியர், சண்டிகேஸ்வரர் ஆகிய சுவாமிகள் மேளதாளம் முழங் கிட கோயிலில் இருந்து தனித்தனி தேரில் எழுந்தருளினர்.



இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு சிவ சிவா என்ற முழக்கத்துடன் ஸ்ரீ நடராஜர், சிவகாமி அம்மன், விநாயகர், சுப்பிரமணியர், சண்டிகேஸ்வரர் ஆகிய தேர்களை வடம் பிடித்து இழுத்தனர். (ஐ)

# ஒரு கிலோ கிராம் அரிசியை 140 ரூபாவுக்கு விற்கமுடியும்

கொழும்பு, ஜூலை 06

ஒரு கிலோ கிராம் அரிசியை 140 ரூபாவுக்கு விற்பனை செய்யக்கூடிய வாய்ப்பிருப்பதக முன்னாள் விவசாய பணிப்பாளர் கே.பீ. குணரத்ன தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அரசாங்கம் மற்றும் நெல் சந்தைப்படுத்தல் சபை என்பன உரிய தலையீடுகளை மேற்கொள்ளும் பட்சத்தில் அரிசியை குறைந்த விலைக்கு விற்பனை செய்ய முடியும் என அவர் கூறினார்.

குறிப்பாக சமுர்த்தி நிவாரணத்தைப் பெறும் குடும்பங்களுக்கு குறைந்த விலையில் அரிசியை பெற்றுக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர் குறிப்பிட்டார். (அ)



# தமிழக மக்களின் 2ஆம் கட்ட நிவாரணம் துணுக்காய், மாந்தை கிழக்கு மக்களுக்கு!

முல்லைத்தீவு, ஜூலை 06

தமிழக அரசின் இரண்டாம் கட்ட நிவாரண பொருட்கள் துணுக்காய பிரதேச செயலகத்துக்குட்பட்ட 572 குடும்பங்களுக்கும் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட 417 குடும்பங்களுக்கும் நேற்று பகிர்ந்தளிக்கப்பட்டது.

இந்தியாவின் தமிழ் நாட்டு அரசினால் இலங்கை மக்களுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ள நிவாரண பொருட்கள் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு கிடைக்கப்பெற்றதை அடுத்து மாவட்டத்தின் பிரதேச செயலகங்களுக்கு அவை நேற்று முன்தினம் மாலை பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

அதன் தொடர்ச்சியாக நேற்று துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்கு பிரதேச செயலகங்களுக்கு இரண்டாம் கட்டமாக கிடைக்கப்பெற்ற 989 குடும்பங்களுக்கான தலா 10 கிலோ நிறை கொண்ட அரிசிப் பைகள் பிரதேச செயலாளர் மற்றும் உதவி பிரதேச செயலாளர், கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் முன்னிலையில் மக்களுக்கு வழங்கப்பட்டன.

குறித்த நன்கொடை உதவித் திட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 2004 குடும்பங்களுக்கும், துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 572 குடும்பங்களுக்கும், மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 417 குடும்பங்களுக்கும், ஒட்டிசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 1023 குடும்பங்களுக்கும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 1962 குடும்பங்களுக்கும், வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் 521 குடும்பங்களுக்கும் அரிசி பகிர்ந்தளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



# மன்னார் பஸ் உரிமையாளர்கள் எரிபொருள் கோரி போராட்டம்!

## ஓட்டோச் சாரதிகளும் பணிப்புறக்கணிப்பு

**மன்னார், ஜூலை 06**

**மன்னாரில் நேற்று திங்கட்கிழமை காலை முதல் மன்னார் தனியார் பஸ் சங்கத்தினர் மற்றும் ஓட்டோச் சாரதிகள் தனித்தனியாக எரிபொருள் கோரி முன்னெடுத்த போராட்டம் காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டனர்.**

அரச போக்குவரத்து சேவையை முன்னெடுக்க முடியாத வகையில் தனியார் பஸ் உரிமையாளர்கள் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் போக்குவரத்தை மேற்கொள்ள காத்திருந்த மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர்.

மன்னார் டிப்போவுக்கு வழங்கப்பட்ட 13,200 லீற்றர் டீசலில் மன்னார் மாவட்ட தனியார் போக்குவரத்துச் சங்க பஸ்களுக்கும் வழங்குமாறு உரிய தரப்பினால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

எனினும் வழங்கப்பட்ட 13,200 லீற்றர் டீசலில் தற்போது வரை 2413 லீற்றர் டீசல் மாத்திரமே தனியார் பஸ்களுக்கு வழங்கப்பட்டது. எனினும் அதனைத் தொடர்ந்து டீசல் எவையும் தனியார் பஸ்களுக்கு வழங்கவில்லை.

தனியார் பஸ் சங்க உரிமையாளர்கள் மன்னார் டிப்போ அதிகாரிகளிடம் டீசல் கோரிய போதும் வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் நேற்றுக் காலை முதல் தனியார் பஸ்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதோடு, அரச போக்குவரத்துச் சேவையை மேற்கொள்ள முடியாத வகையில் தனியார் பஸ்களினால் வீதியை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டதோடு தமக்கான எரிபொருளையும் வழங்கக் கோரிக்கை விடுத்தனர்.

இதனால் போக்குவரத்துச் சேவைகள் சிறிது நேரம் முழுமையாக பாதிக்கப்பட்டதோடு, மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர்.

இந்த நிலையில் நேற்று முற்பகல் 10 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மேல் தலைமையில் அரச மற்றும் தனியார் போக்குவரத்துச் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் பிரதேசச் செயலாளர், இராணுவம்,பொலிஸ் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது இலங்கை போக்குவரத்துச் சபையின் எண்ணெய்க் குதங்களில் இருந்து தனியார் பஸ் சேவை பஸ்களுக்கு டீசல் வழங்குவது என்ற அரச நிலைப்பாட்டுக்கு அமைய மன்னார் சாலைக்கு 6600 லீற்றர் டீசல் வருமாக இருந்தால் அவற்றில் 2500 லீற்றர் டீசலையும், 13,200 லீற்றர் டீசல் வருமாக இருந்தால் 5000 லீற்றர் டீசலையும் தனியார் பஸ்களுக்கு வழங்குவது என குறித்த கலந்துரையாடலின் போது இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து தனியார் பஸ் சங்க உரிமையாளர்கள் முன்னெடுத்த பகிஷ்கரிப்புப் போராட்டம் கைவிடப்பட்டது.

இதேவேளை, மன்னாரில் சேவையில் ஈடுபடும் ஓட்டோச் சாரதிகள் தமக்கு உரிய முறையில் எரிபொருளை வழங்க கோரிப் போராட்டத்தில் ஈடுபட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# மாந்தை கிழக்கில் நீண்ட நாள் சைக்கிள் திருடர் 3 பேர் கைது!

## 3 சைக்கிள்கள், 5 தண்ணீர் பம்பிகள் மீட்பு

முல்லைத்தீவு, ஜூலை. 06

மாந்தை கிழக்கில் நீண்ட நாட்களாக இடம்பெற்ற சைக்கிள் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 3 சைக்கிள்கள், 05 தண்ணீர் பம்பிகள் மீட்கப்பட்டுள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக சைக்கிளுக்கான விலையும் அதிகரித்துள்ளது.

எரிபொருள் தட்டுப்பாட்டினால் மக்கள் அதிகளவில் சைக்கிள் பாவனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் பாடசாலை மாணவர்கள் தொடக்கம் விவசாயிகள் வரையில் சைக்கிளை வாங்கி வருகின்றார்கள். அதிகளவு கேள்வி சைக்கிள்களுக்குக் காணப்படுவதால் அவற்றைத் திருடி மாற்றம் செய்து விற்பனை செய்யும் திருடர்களின் செயற்பாடுகளும் அதிகரித்துள்ளன.

முல்லைத்தீவு நட்டாங்கண்டல் பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட பல பகுதிகளில் சைக்கிள் திருட்டு மற்றும் தண்ணீர்ப் பம்பிகள் திருட்டில் ஈடுபட்டு அவற்றை விற்பனை செய்து வந்த நபர் ஒருவர் மளிகைக் கடையில் நின்ற சைக்கிள் ஒன்றைத் திருடி சென்றவேளை பொதுமக்களால் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்ட பின் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

நட்டாங்கண்டல் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரட்னநாயக்க தலைமையிலான குழுவினர் விசாரணை நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் பிரதேச மக்களின் ஒத்துழைப்புடன் கைது செய்யும் நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

சைக்கிள் திருட்டில் ஈடுபட்ட ஒருவர் அடையாளப் படுத்தப்பட்டிருந்ததுடன் அவருடன் தொடர்புடைய மாந்தை கிழக்குப் பகுதியைச் சேர்ந்த மேலும் இருவர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து 03 சைக்கிள்கள் 05 தண்ணீர்ப் பம்பிகள் மீட்கப்பட்டன. (அ)

# வவுனியா மாவட்டத்தில் எரிபொருள் விநியோகத்தை சீரமைக்கவேண்டும்

## அரச அதிபருக்கு பொதுமக்கள் கடிதம்

வவுனியா, ஜூலை 06

வவுனியா மாவட்டத்தில் எரிபொருளை பெற்றுக் கொள்ள மக்கள் நீண்ட நாட்களாக வீதிகளில் காத்திருக்க வேண்டிய நிலை காணப்படுகின்றமை தொடர்பில் வவுனியா மாவட்ட பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து மக்கள் அமைப்பு என்ற ரீதியில் அரசாங்க அதிபரிடம் கடிதமொன்றினை நேற்று கையளித்தன.

வவுனியா மாவட்டத்தில் விவசாயிகள், ஓட்டோச் சாரதிகள், பஸ் உரிமையாளர்கள், வர்த்தகர் சங்கத்தினர், ஊடகவியலாளர்கள் ஆகியோரை உள்ளடக்கி கையளிக்கப்பட்ட குறிப்பிட்ட கடிதத்தில்-

வவுனியா மாவட்டத்தில் பொதுமக்கள் உட்பட அனைத்து துறையினருக்கும் எரிபொருளை வழங்கச் சீரான நடைமுறையை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக அரசாங்க அதிபர் தலைமையில் இன்று விசேட கூட்டமொன்றுக்கு ஏற்பாடும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (அ)



# கிளிநொச்சி மாவட்ட செயலகத்தை நேற்று முற்றுகையிட்டனர் பஸ் உரிமையாளர்கள்!

கிளிநொச்சி, ஜுலை 06

கிளிநொச்சி மாவட்ட செயலக வாயிலை மறித்து தனியார் பஸ் சேவையினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முன்னதாக டீசல் தருமாறு கோரி கிளிநொச்சியில் அரச பஸ் சாலையின் பிரதான வாயிலை மறித்து பஸ்ஸை நிறுத்தி அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த, தனியார் பஸ்ஸை அகற்ற முற்பட்டபோதிலும், அரச பஸ்ஸே இடையூறாக இருப்பதாக தெரிவித்த தனியார் பஸ் உரிமையாளர்கள் அதனை அகற்றக் கோரினர்.

குறித்த அரச பஸ் அகற்றப்பட்டதைத் தொடர்ந்து, தனியார் பஸ்ஸை பொலிஸார் அகற்ற முற்பட்டனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தனியார் பஸ் உரிமையாளர்கள் பஸ்ஸின் முன் இருந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து அரச அதிபர் தீர்வு தரவேண்டும் எனக் கோரிக்கை விடுத்து கிளிநொச்சி மாவட்ட செயலகத்தை நேற்று பிற்பகல் அவர்கள் முற்றுகையிட்டனர். (அ)

# தனியார் பஸ் சாரதிகள் டிப்போக்களில் எரிபொருளைப் பெற்று விற்கிறார்களா?

## இ.போ.ச தலைவர் சந்தேகம்

கொழும்பு, ஜுலை 06

**இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் டிப்போகளிலிருந்து தனியார் பஸ்கள் எரிபொருளைப் பெற்று அவற்றை விற்பனை செய்கின்றனவா என்ற சந்தேகம் எழுவதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான 4,000 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இதுதவிர இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் டிப்போக்களில் தனியார் பஸ்களுக்கும் எரிபொருள் வழங்கப்படுகிறது.

தனியார் பஸ்களுக்கு எரிபொருளை வழங்கும்போது போதிய அளவில் விநியோகம் இடம்பெறுவதில்லை என்ற குற்றச்சாட்டு எழுகிறது.

எனினும் குறித்த அளவு பஸ் சங்கத்தினராலேயே தீர்மானிக்கப்பட்டது. தொடர்ந்தும் அந்த அடிப்படையிலேயே எரிபொருள் வழங்கப்படுகிறது.

கடந்த தினங்களில் எரிபொருளை வழங்கிய பஸ் டிப்போக்களில் கண்காணிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் அவ்வாறு எரிபொருளை பெற்றுக் கொண்ட பஸ்கள் உரிய வீதிகளில் சேவையில் ஈடுபடுவதில்லை என தெரிய வந்துள்ளது.

குறித்த பஸ்கள் ஊடாக எரிபொருள் விற்பனை அல்லது வேறு செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படுகிறதா? என்ற சந்தேகம் எழுகிறது.

இந்த விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகள் பரிசீலனைகளை மேற்கொள்ள வேண்டும்-என்றார். (அ)

# கைதான தமிழக மீனவர் ஐவருக்கு 19 ஆம் திகதி வரை விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜுலை 06

எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 5 தமிழக மீனவர்களையும் எதிர்வரும் 19ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப்பட்டினம் பகுதியைச் சேர்ந்த ஐந்து மீனவர்களும் விசைப்படகொன்றில் கோடியாக்கரை பகுதியில் இருந்து மீன்பிடிக்க புறப்பட்டனர்.

இவர்கள் எல்லை தாண்டி காரைநகர் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த வேளை கடற்படையினரால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் நேற்று செவ்வாய்க் கிழமை கடற்தொழில் நீரியல் வளத்துறை ஊடாக ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதை தொடர்ந்து அவர்களை எதிர்வரும் 19ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

அதேவேளை, கடந்த ஞாயிற்றுக்கிழமை எல்லை தாண்டி மீன் பிடியில் ஈடுபட்ட குற்றத்தில் கைது செய்யப்பட்ட 12 தமிழக மீனவர்களை பருத்தித்துறை நீதவான் எதிர்வரும் 08ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இரு தினங்களில் எல்லை தாண்டிய குற்றத்தின் கீழ் 17 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)



# துருக்கி சரக்கு விமானம் கட்டுநாயக்காவில் விபத்து!

கொழும்பு, ஜுலை 06

துருக்கி விமான சேவைக்கு சொந்தமான சரக்கு விமானம் ஒன்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து துருக்கி நோக்கி புறப்பட இருந்த ஏ 330-300 எயார் பஸ் வகையைச் சேர்ந்த விமானமொன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

துருக்கி இஸ்தான்புல் நகரிலிருந்து பொருட்களை ஏற்றி வந்த விமானம், 45 மெற்றிக் தொன் நிறையுடைய ஆடைகளை ஏற்றிக்கொண்டு நாட்டிலிருந்து மீண்டும் புறப்படவிருந்ததாக விமானநிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

தற்போது நிலவும் கடும் காற்று காரணமாக விமானத்துக்கு கொண்டுவரப்பட்ட கொள்கலன் ஒன்று விமானத்தின் இயந்திரத்தில் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டதாக அவர்கள் கூறினர்.

இதன் காரணமாக குறித்த விமானம் நாட்டிலிருந்து வெளியேறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக விமான நிலைய அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (அ)

# அறுவை சிகிச்சை உபகரணங்களை அவசர நன்கொடையாக வழங்குங்கள்

## தேசிய இரத்த மாற்று சேவை கோரிக்கை

கொழும்பு, ஜுலை 06

அனைத்து நலம் விரும்பிகள் மற்றும் தன்னார்வலர்கள் முன் வந்து அறுவை சிகிச்சை உபகரணங்களை நன்கொடையாக வழங்குமாறு தேசிய இரத்த மாற்று சேவை, வேண்டுகோள் விடுத்துள்ளது.

சுகாதார அமைச்சின் ஊடாக, இது தொடர்பான வேண்டுகோள் ஒன்றை தேசிய இரத்த மாற்று சேவைப் பணிப்பாளர் விடுத்துள்ளார்.

அனைத்து நலம் விரும்பிகள் மற்றும் தன்னார்வலர்கள் இந்த பணியை முன்னெடுத்துச் செல்ல உதவுமாறு அவர் கோரியுள்ளார். அதன்படி, தன்னார்வலர்கள் தங்களால் இயன்ற அறுவை சிகிச்சை உபகரணங்கள் மற்றும் பொருட்களை விரைந்து நன் கொடையாக வழங்குமாறு அவர் கேட்டுள்ளார்.

இந்த அறுவை சிகிச்சை பொருட்களை வழங்குவதன் மூலம் ஆயிரக்கணக்கான உயிர்களைக் காப்பாற்ற முடியும் என்று தேசிய இரத்த மாற்று சேவைப் பணிப்பாளர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# இராணுவ காவலரணை அகற்றினர் ஊர் மக்கள்

## வட்டுவாகல் பகுதியில் பதற்றம்

முல்லைத்தீவு, ஜுலை 06

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வட்டுவாகல் பகுதியில் உள்ள இராணுவக் காவலரண் ஒன்றை கிராமத்து மக்கள் நேற்று முன்தினம் மாலை திரண்டு அகற்றியதால் அந்தப் பகுதியில் பதற்றமான சூழல் ஏற்பட்டது.

வட்டுவாகல் பாலத்துக்கு நெருக்கமாக காணப்படும் சப்த கன்னியர் கோவிலின் வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் திங்கள்கிழமை நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

அதற்காக முல்லைத்தீவு கடலில் தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு ஆண்டு தோறும் நடைபெறுவது வழக்கம். இருந்த போதிலும் இந்த ஆண்டு தீர்த்தம் எடுப்பதற்குச் செல்ல இராணுவத்தினர் அனுமதி மறுத்தனர்.

இதனை அடுத்து அங்கு திரண்ட மக்கள் ஏ-35 வீதியை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர். மக்களை சமரசப்படுத்தும் முயற்சியில் இராணுவ அதிகாரிகள் ஈடுபட்டபோதிலும் தீர்த்தம் எடுக்கச் செல்ல அனுமதிக்கவில்லை.

இதன் தொடராக அங்கு ஒன்று திரண்ட கிராமத்து மக்கள் இராணுவக் காவலரணின் வேலிகளை அகற்றி அப்புறப்படுத்தினர். (அ)

# சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 2000 கிலோ மஞ்சள் பூநகரியில் மீட்பு!

கிளிநொச்சி, ஜுலை 06

சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட மஞ்சள் இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு பூநகரி வெட்டக்காடுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குள் கொண்டு வரப்பட்ட மஞ்சள் ஒருதொகையே இவ்வாறு இராணுவத்தினரால் மீட்கப்பட்டது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் முல்லைத்தீவு பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 66ஆவது டிவிசன் பகுதியைச் சேர்ந்த இராணுவத்தினரால் சோதனையிடப்பட்ட போது இவை மீட்கப்பட்டன.

இந்த சுற்றிவளைப்பில் 65 பெரிய பைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 2000 கிலோ மஞ்சள் மற்றும் 03 பைகளில் இருந்த பூச்சிக் கொல்லி மருந்துகள் என்பன கைப்பற்றப்பட்டன.

இந்த மஞ்சள் தொகை இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்டதாக சந்தேகிக்கப்படுவதுடன், சந்தேகநபர்களை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை பூநகரி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# எரிபொருள் நிலையங்களில் மக்களுடன் படைத்தரப்பினர் மோதுவதை தவிருங்கள்!

## ஜனாதிபதிக்கு சட்டத்தரணிகள் சம்மேளனம் கடிதம்

**கொழும்பு, ஜூலை 06**

**இலங்கையின் பல பாகங்களிலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொதுமக்களுடன் படைத்தரப்பினர் மோதிக்கொள்வதை தவிர்க்கும் வகையில், பாதுகாப்புச் செயலாளர், முப்படைத் தளபதிகள் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும் என்று ஜனாதிபதியிடம் இலங்கை சட்டத்தரணிகள் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.**

எரிபொருள் நிலையங்களில் - பொதுமக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களைப் புரிந்து கொள்வது அவசியம். அதே நேரம் காவல்துறையினரும் ஆயுதப்படையினரும் மிகவும் கடினமான சூழ்நிலையில் செயற்படுகின்றனர்.

எனினும், பொதுமக்களுடன் வன்முறையை தவிர்த்து மிகவும் நிதானத்துடன் செயற்படுமாறு காவல்துறைக்கும் படையினருக்கும் கடுமையான அறிவுறுத்தல்களை வழங்குவது அவசியமாகும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சம்மேளனம் ஜனாதிபதிக்கான தமது கடிதத்தில் கோரியுள்ளது.

அத்தகைய வன்முறைக்கு பொதுமக்களை உட்படுத்தும் தவறான அதிகாரிகளைக் கையாள்வதற்கு சட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் சம்மேளனம் கேட்டுள்ளது.

இலங்கையின் பொலிஸ் துறையினரால் முக்கியமாக நிர்வகிக்கப்பட வேண்டிய விடயங்களில், படையினரை ஈடுபடுத்துவது பொருத்தமானதல்ல என்றும் சட்டத்தரணிகள் சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையிவல் கடந்த வாரம் காலியில் மேற்கொள்ளப்பட்டதை போன்று, அமைதியான போராட்டங்களுக்கு இடையூறு விளைவிக்கவோ அல்லது தடுக்கவோ ஆயுதப் படைகளைப் பயன்படுத்தக்கூடாது என்றும் இலங்கை சட்டத்தரணிகள் சம்மேளனம் ஜனாதிபதியிடம் கேட்டுள்ளது.

இல்லையெனில், எதிர்பாராத குழப்பநிலையையும் அமைதியின்மையையும் தடுக்க முடியாது என்றும் சட்டத்தரணிகள் சம்மேளனம் எச்சரித்துள்ளது.

(அ)

# மண்ணெண்ணெய் விலையை அதிகரிக்க வேண்டியேற்படும்

## அமைச்சர் காஞ்சன விஜேசேகர கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 06

எதிர்வரும் காலங்களில் மண்ணெண்ணெய் விலையை கட்டாயம் அதிகரிக்க வேண்டியேற்படும் என அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும்போது அமைச்சர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த காலங்களில் நாட்டு மக்களுக்கு, மின்சாரம், நீர் மற்றும் எரிபொருள் என்பவற்றை குறைந்த விலைகளிலேயே அரசாங்கம் வழங்கி வந்தது.

மண்ணெண்ணெய் தற்போது 87 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. அதற்காக 420 ரூபா செலவு ஏற்படுகிறது.

எனவே, எதிர்வரும் நாட்களில் கட்டாயமாக மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பட வேண்டும்-என்றார்.

(அ)

# அம்பாறை உமரி கடற்கரையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு!

அம்பாறை, ஜூலை 06

அம்பாறை - உமரி கடற்கரையில் கரை ஒதுங்கிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று முன் தினம் இரவு மீட்கப்பட்டுள்ளதாக திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர்.

கோமாரி பிரதேசத்தைச் சேர்ந்த பெரியதம்பி சற்குணம் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உமரி பகுதி கடற்கரையில் உயிரிழந்த நிலையில் சம்பவ தினமான நேற்று முன் தினம் திங்கள் இரவு 6.30 மணி அளவில் சடலம் ஒன்று கரை ஒதுங்கியுள்ளதை கண்டுள்ள பொதுமக்கள் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# கோட்டா பதவியில் இருக்கும் ஒவ்வொரு நாளும் நாங்கள் பல மில்லியன் டொலரை இழக்கிறோம்

## முன்னாள் கிழக்கு ஆளுநர் சுட்டிக்காட்டு

மட்டக்களப்பு, ஜூலை 06

மிகப்பெரிய தியாகமாக கருதி தனது ஜனாதிபதி பதவியை எமது நாட்டின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இராஜினாமா செய்து சகல சமூகங்களையும் உள்ளடக்கிய புதிய அரசாங்கத்தை இந்த நாட்டில் உருவாக்க முடியமாக இருந் தால் தலைதூக்கியுள்ள பொருளா தார பிரச்னையை தீர்த்து வைக்க அரபுநாடுகளின் உதவியை பெற்று பிரச்னைக்கு முழுமையான தீர்வை பெற ஆயத்தமாக இருக்கின்றோம் என்ற செய்தியை நாட்டு மக்களுக்கு சொல்லிவைக்க விரும்புகிறோம் என கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி எம்.எல்.எம்.ஏ. ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

காத்தான்குடியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் உட்பட முஸ்லிம் தலைவர்கள் ஏன் இலங்கையின் இன்றைய நிலையை ஏத்தி வைத்து பிரச்னை களை தீர்க்க அரபு நாடுகளிட மிருந்து உதவிகளை பெற்றுக்கொடுக்கக் கூடாது என்ற கேள்வியை பொது மக்கள் முன்வைத்து வருவதை ஊட கங்களில் பார்த்தேன். எது எவ்வா றாக இருந்தாலும் இந்த நாட்டை தலைநிமிரச் செய்வது இலங்கை யர்களாகிய எங்களின் கடமையாக இருக்கிறது. நாட்டுக்கு ஏற்பட் டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டிய கடமை மற்றும் பொறுப்பு எல்லோருக்கும் இருக்கிறது. அந்த அடிப்படையில் இந்த நாட்டை கட்டியெழுப்ப நாங்கள் எப்போதும் தயாராக இருக்கின்றோம்.

ஜனாதிபதி இந்த பதவியில் இருக்கும் ஒவ்வொரு நாளும் பல மில்லியன் டொலர்களை நாங்கள் இழந்து கொண்டிருக்கிறோம். அவர் கடந்த இரண்டு மாதங்க ளுக்கு முன்னர் இராஜினாமா செய் திருந்தால் நாம் கடன் கட்டவேண் டிய காலம் குறுகிய காலம். இன்றைய நிலையில் அவர் இராஜினாமா செய்தால் எங்களுக்கு கடன் கட்டவேண்டிய காலம் ஒரு குறிப்பிட்ட காலமாக இருக்கிறது. இன்னும் இரண்டு, மூன்று மாதங் களுக்கு இந்த நிலை நீடித்தால் எங்க ளினால் கூட இந்த நிலையை சமா ளிக்க முடியாத நிலை உண்டாகும். இந்த நாடு மிக மோசமான பொரு ளாதார நெருக்கடியை சந்தித்து வறு மையான நாடாக மாற்றம் பெரும்.

எமது நாட்டின் உயரிய பதவி யான ஜனாதிபதி பதவி 69 லட்சத் திற்கும் அதிகமான மக்கள் ஆணை கொடுத்து உருவாக்கப்பட்டது. கடந்த இரண்டரை ஆண்டுகள் அந்த பதவியில் இருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த காலங்களில் நாட்டுக்காக செய்த பல தியாகங்களை போன்று இந்த நாட்டு மக்களின் மீது நம்பிக்கை வைத்து மக்களின் நன்மைக்காக மீதி இரண்டரை ஆண்டுகளை தியாகம் செய்து பதவி துறக்க வேண்டும்.-என்றார்.

(அ)

# ஜூலை 5-6 இல் தாக்குதல் மிரட்டல் விரிவான விசாரணை முன்னெடுப்பு

கொழும்பு, ஜூலை 06

இந்த மாதம் பயங்கரவாத தாக்குதல் ஒன்று நடத்தப்படாலம் என உறுதிப்படுத்தப்படாத புலனாய்வுத் தகவல்களை மேற்கோள்காட்டி, பொலிஸ்மா அதிபர் வெளியிட்டுள்ள கடிதம் ஒன்று தற்போது சமூகவலைதளங்களில் பரவி வருகிறது.

இந்த விடயம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

கறுப்பு ஜூலை தினத்தை நினைவு கூறும் வகையில் இந்த மாதம் 5ஆம் 6ஆம் திகதிகளில் பயங்கரவாத தாக்குதல் நடத்தப்படலாம் என உறுதிப்படுத்தப்படாத தகவல்களை சுட்டிக்காட்டி இந்த கடிதம் வெளியிடப்பட்டுள்ளது.

எனினும் இவ்வாறான தாக்குதல் ஒன்று நடத்தப்படுவதற்கான களநிலைமைகள் உறுதிப்படுத்தப்படவில்லை என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

பொது மக்களின் பாதுகாப்புக்கு அரசாங்கம் முன்னுரிமையளிப்பதன் காரணமாக புலனாய்வு தரப்பினருக்கு கிடைத்த இந்த தகவல் குறித்து, விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்த மக்கள் அச்சமடைய தேவையில்லை எனவும் தங்களது நாளாந்த நடவடிக்கைகளை வழமைப் போன்று மேற்கொள் ளுமாறும் பாதுகாப்பு அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது. (அ)

# ரயில் பணியாளர்கள் பணிப்புறக்கணிப்பு!

கொழும்பு, ஜூலை 06

ரயில் போக்குவரத்து சேவையாளர்களில் சிலர் பணிப் புறக்கணிப்பை ஆரம்பித்துள்ளனர்.

ரயில் திணைக்களம் முறையற்ற வகையில் சேவையாளர்களுக்கு எரிபொருளை விநியோகிப்பதாக குற்றம் சுமத்தி இந்தப் பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்துள்ளனர்.

இதன் காரணமாக ரயில் சேவைகளில் தாமதம் ஏற்படக் கூடும் என ரயில் தொழிலாளர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. தற்போதைய சூழ்நிலையில் ரயில்களை தரிப்பிடங்களில் இருந்து அனுப்பி வைக்கும் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, கொழும்பு கோட்டை மற்றும் மருதானை ரயில் நிலையங்களின் அதிபர்கள் கடமைகளில் இருந்து விலகியுள்ளனர்.

தங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதுகாப்பு தொடர்பான பிரச்னை காரணமாக, அவர்கள் கடமைகளிலிருந்து விலகியுள்ளதாக ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# எரிபொருள் தட்டுப்பாட்டில் எரிந்துபோன மனிதாபிமானம்!

நூருல் ஹுதா உமர்

சுதந்திர இலங்கை வரலாற்றில் என்றுமில்லாத வரிசைகள் எரிபொருளைப் பெற நாட்டின் எல்லா பாகங்களிலும் காத்து நிற்கிறது. படித்தவன், பாமரன், முக்கியஸ்தர் எனப்பலரும் வரிசையில் சமனாக நிற்கிறார்கள். ஒரே தண்ணீர் போத்தலை மாறிமாறி பருகிக்கொண்டும், ஒரே பிஸ்கட் பக்கட்டை பகிர்ந்து சாப்பிட்டுக் கொண்டும் இலங்கை அரசியல் முதல் சர்வதேச விடயங்களை ஆராய்ந்து கொண்டும் பொழுதைக் கழிக்கிறார்கள். ஆனாலும் இதனை கூர்ந்து கவனித்தால் ஒரு ஆச்சரியம் இருக்கிறது. நிறைந்த பணக்காரனின், உயர்ந்த செல்வந்தனின், முக்கிய அரசியல்வாதிகளின், அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்களின் வாகனங்களை எரிபொருள் பெற காத்திருப்போர் வரிசையில் காணவில்லை. உயர்ரக வாகனங்கள் வரிசையில்  காணவில்லை. மண்ணெண்ணெய்க்காக பல மணிநேரம் நிறைமாத கற்பினிகள் கூட வரிசையில் நிற்கிறார்கள். அங்கவீனர்கள், முதியோர்கள் ஏன் பாடசாலை சிறுவர்கள் கூட வரிசையில் தவிக்கிறார்கள். இந்த வரிசைகளில் அநேக இடங்களில் மனிதாபிமானம் இறந்து போனதும், சில இடங்களில் மனிதத்தன்மை வெளிப்பட்டதும் காலம் காட்டிய கோலமாக மலர்ந்திருக்கிறது. சமூக வலைத்தளங்களில் பாலகர்களின் நிலைகள் நெஞ்சுருக வைக்கும் அளவுக்கு பரிதாபமாக இருக்கிறது. வரிசையில் காத்திருந்த பல உயிர்கள் ஆண்டவன் காலடியை சென்றடைந்தும் இருக்கிறது.




நீண்டவரிசையில் காத்திருந்தும் இப்போதைய நாட்களில் இடைநடுவில் எரிபொருள் இல்லாமல் கலைகிறது. ஆனாலும் சில இடங்களில் நள்ளிரவில் வெளியிடங்களுக்கு கலன்களில் அடைக்கப்பட்டு கடத்தப்படும் எரிபொருளை கடந்துதான் ஒவ்வொரு நாளும் விடிகிறது என்றால் சிலர் கோபிக்கலாம். ஆனால் பெரும்பாலும் உண்மை அதுதான். மனசாட்சியை அடகுவைத்துவைத்து தலைக்கேறிய மமதையுடன் சில செட்காரர்கள் (எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள்) நடந்து கொள்கிறார்கள் எனும் குற்றசாட்டு இன்றைய நாட்களில் மலிந்து காணப்படுகிறது. இருந்தாலும் பல எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் இறைவனுக்கும் , மனச்சாட்சிக்கும் பயந்து நடந்து கொள்வதும் இல்லாமல் இல்லை. எரிபொருளை பதுக்கும் வாடிக்கையாளனும் பதுக்கும் விற்பனையாளனும் மரணித்தால் அதன் பயனை தனது மரணக்குழி வரை கொண்டுசெல்ல முடியாது என்பதை மறந்தே விட்டார்கள்.

நிறைந்த பணத்துக்கு குறைந்த எரிபொருளை பொதுமக்கள் பெறவேண்டிய நிலையில் எரிபொருளுக்காக மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வரும் சூழ்நிலையில் கிழக்கு மாகாணத்தில் இருந்து மேல்மாகாணம் அடங்கலாக பல்வேறு மாகாணங்களையும் நோக்கி இரவு நேரங்களில் சொகுசு வாகனங்களிலிலும், பொதுமக்கள் பயணிக்கும் பஸ் வண்டிகளிலும் பெற்றோல், டீசல் உட்பட பல்வேறு வகையான எரிபொருட்கள் கலன்களில் அடைந்து செல்கிறதாக முக்கிய பிரமுகர் ஒருவர் தனது அனுபவத்தை அண்மையில் என்னிடம் பகிர்ந்து கொண்டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் கலன்களில் அடைக்கப்பட்ட எரிபொருள் மட்டுமின்றி நிரப்பப்பட்ட சமையல் எரிவாயுக்களும் நான் பயணித்த பொதுமக்கள் பயன்பாட்டு வாகனத்தின் இருக்கைகளுக்கு கீழ் அமைக்கப்பட்டுள்ள களஞ்சிய பகுதியில் வைத்து கொழும்புக்கு எடுத்து வரப்பட்டது. பயண முடிவில் என்னுடைய பயணப்பொதிகளை எடுக்கும்போதே அதை அறிந்து மிகவும் பயந்தேன் என்றார்.

சொந்த வாகனத்தில் செல்ல எரிபொருள் தட்டுப்பாடு இருந்த காரணத்தினால் நான் ஊரிலிருந்து தலைநகருக்கு பயணித்த சொகுசு பேருந்தில் எரிபொருள் நிரப்பப்பட்ட கலன்கள் 20-25ம், சமையல் எரிவாயு 20-30 உம் இருந்ததை பயண முடிவில் என்னுடைய பயணப்பொதிகளை எடுக்கும் போது கண்டேன். பஸ்ஸில் குளிரூட்டி முழுமையாக அன்றிரவு முழுவதும் தொழிற்பட்டுக்கொண்டிருந்தது. அமுக்கம் அல்லது சூடாகி இவை தீப்பற்றியிருந்தால் அல்லது விபத்தொன்று நடந்து பஸ் தீப்பிடித்திருந்தால் நிலைமை எப்படி இருந்திருக்கும் என்பதை கற்பனை கூட பண்ணிப்பார்க்க முடியாதளவில் கொடூரமாக இருந்திருக்கும் என அரசாங்கத்தில் பொறுப்பு வாய்ந்த பதவியொன்றில் இருக்கும் உயரதிகாரி என்னிடம் தெரிவித்தார்.

இப்படி கருப்புச்சந்தையில் டீசல் 800-1000 வரையும் பெற்றோல் 650- 1000 ரூபாய்க்கும் மண்ணெண்ணை 200- 250 ரூபாய்க்கும், சமையல் எரிவாயு 25000 ரூபாய் வரையும் கருப்பு சந்தையில் வியாபாரம் நடப்பதாக அறிய முடிகிறது. ஊருக்கு வரும் எரிபொருள் எல்லாம் கொழும்புக்கும், கண்டிக்கும் இரவு பஸ்ஸில் ட்ரிப் போகுது, தட்டி கேட்க வேண்டியவர்கள் குளிர்ந்த அறையில் கூலாக அமர்ந்து வேடிக்கை பார்க்கிறார்கள். சில இடங்களில் நண்பர்கள், முக்கியஸ்தர்களுக்காக பாதுகாப்பு வேலிகள் கூட செட்டை பதம் பார்க்கிறது என பொதுமக்கள் பலரும் ஆதங்கப்படும் நிலை நாடுமுழுவதிலும் இருக்கிறது. சில முக்கிய அதிகாரிகள் தனது அதிகாரத்தை பயன்படுத்தி மொத்தமாக எரிபொருளை கொள்வனவு செய்து கருப்பு சந்தையில்  அதிக விலைக்கு விற்கிறார்கள் என்றால் நாம் நம்பித்தான் ஆகவேண்டியிருக்கிறது. அப்படி காலம் கெட்டுபோகி இருக்கிறது.

வரிசையில் பல நாட்களாக, பல மணித்தியாலங்களாக காத்திருந்து இறுதி நேரத்தில் எரிபொருள் கிடைக்காத பொதுமகன், நீங்கள் செய்வது உங்களுக்கே சரியாக தெரிகிறதா? பெற்றோல் முடிந்துவிட்டது என சொல்லி செட்டை மூடினீர்கள். இன்று காலையில் புதிய விலையில் பல நிரப்பு நிலையங்கள் காலையில் எரிபொருளை வழங்குகிறது. விலை கூட்டியதோ இன்று காலை 3 மணிக்கு. அப்போ உங்களுக்கு புது விலையில் பௌசர் எப்போ வந்திச்சு? இந்த நாட்டில் மக்கள் படும் துன்பத்துக்கு அரசியல்வாதிகள் எவ்வளவு காரணமோ அதே பங்கு இந்த முதலாளிகளுக்கும் உண்டு. சாதாரணாமாக கிடைக்கும் லாபத்திற்கு மேலதிகமாக நீங்க பெற்றோலுக்கு லீற்றர் ஒன்றிற்கு 82 ரூபாவும், டீசலுக்கு லீற்றர் ஒன்றிற்கு 111 ரூபா அளவிலும் விலை மாற்றத்தால் மட்டும் கொள்ளை இலாபம் உழைக்குறீங்க. அரசியல்வாதிகள் மீது மக்களுக்கு இருக்கும் கோவம் உங்களை நோக்கி திரும்பினால் என்னவாகும் என யோசித்து பாருங்க. இது பெற்றோல் செட் முதலாளிகளுக்கு மட்டுமல்ல, எல்லா முதலாளிகளுக்கும் தான். நீங்களும் இந்த சமுதாயத்தில் தான் வாழ்கின்றீர்கள். உங்கள் பிள்ளைகளுக்கு பாவச்சொத்தை சேர்த்து வைத்து விட்டு போகாதீங்க. யுத்த காலத்தில் கூட எம்மக்கள் பரஸ்பரம் தங்களிடமிருந்ததை பகிர்ந்து ஒருவொருக்கொருவர் உதவியாக வாழ்ந்தார்கள் எனும் ஆதங்கத்தை கொட்டிய பொதுமகனின் ஆதங்கத்தில் ஆயிரம் அர்த்தங்கள் புதைந்துள்ளது.

இன்று உலகம் சுற்றுவது எரிபொருளில் என்றாகிவிட்டது. எரிபொருள் விலை கூடினால் எல்லாவற்றின் விலையும் கூடுகிறது. எரிபொருள் கிடைக்




காமல் விட்டால் எல்லாமே ஓய்வாகி விடுகிறது என்பதே இன்றைய காலத்தில் இயற்கையின் நியதியாகி இருக்கிறது. இவற்றை தீர்க்கும் நோக்கில் நாம் என்ன தான் திட்டம் தீட்டினாலும் அது தோல்வியடைகிறது. இப்போது நாட்டில் பெற்றோல், டீசல் இல்லை என்றாகிவிட்டது. காணும் இடம் எல்லாம் வாகனங்களின் அணிவரிசை. செட் ஓனர்களுக்கு கூட எப்போது பெற்றோல் கிடைக்கும் என்பது தெரியாத நிலை. ஏன், பெற்றோலிய துறை அமைச்சருக்கு கூட தெரியாது. இவ்வாறான இக்கட்டான நிலையில் பயோ டீசல் பற்றிய உரையாடல்கள், தேடல்கள் சூடு பிடிக்க தொடங்கி இருக்கின்றன.



நிறைய வளர்ச்சி அடைந்த நாடுகளில், இந்தியாவில் கூட இப்போது பெற்றோல் டீசலுக்கு மாற்றீடாக பயோ டீசல் பாவிக்கப்பட்டு வருகிறது. இதன் ஆரம்ப உற்பத்தி செலவு கொஞ்சம் அதிகம் என்பதால் இந்த தொழிற்துறை அவ்வளவு பிரபல்யம் அடையவில்லை. ஆனால் நமது நாடு இருக்கும் இக்கட்டான நிலையில் இந்த மாற்றீடு சில வேளை நல்ல தெரிவாக இருக்கும். பெரிய ஹோட்டல்களில், உணவகங்களில் ஏராளமான சமையல் எண்ணெய் வீணாகும். ஒரு முறை பாவித்த எண்ணையை, மீண்டும் ஒரு முறை அவர்கள் பாவிக்க மாட்டார்கள். கொட்டிவிடுவார்கள். ஆனால், நமது நாடுகளில் இவ்வாறு உபயோகிக்கப்பட்ட சமையல் எண்ணெய்யை, சிறு ஹோட்டல்காரர்கள், சாலையோர கடைக்கரர்கள் குறைந்த விலைக்கு வாங்கிச் சென்று பயன்படுத்துகிறார்கள். கொத்து போட, பறாட்டா மாபிசைய பாவிக்கிறார்கள். பலமுறை ஒரே சமையல் எண்ணெய்யை மீண்டும் மீண்டும் பயன்படுத்துவது உடல் நலத்துக்கு மிகவும் கேடு என்று சொன்னாலும் யாரும் கேட்பார் இல்லை.

அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளில், உணவகங்கள் பயன்படுத்திய சமையல் எண்ணெயை மொத்தமாக சேகரித்து எடுத்துப்போய் பயோ டீசல் செய்கிறார்கள். வடிகட்டி  சுத்திகரித்து 10:1 எனும் விகிதத்தில் மெதனாலுடன் கொஞ்சம் சோடியம் ஹைட்ரொக்ஸைடை கலந்து புராசஸ் செய்கிறார்கள். காய்ச்சி எடுக்கிறார்கள். கிட்டத்தட்ட 100 லிட்டர் பாவித்த சமையல் எண்ணெயிலிருந்து 100 லிட்டர் பயோடீசலும், 10 லிட்டர் க்ளிசராலும்/கிளிசரீன் எடுக்கிறார்கள். க்ளிசாராலை மருந்து உற்பத்தி நிறுவனங்களுக்கும், பயோடீசலை வாகனங்களுக்கும் விற்பனை செய்கிறார்கள். இப்படி அமெரிக்காவில் மட்டும் ஒரு நாளைக்கு 64000 பெரல் பயோடீசல் தயாரிக்கிறார்கள். ஜேர்மனியில் 55000. நமது அண்டை நாடான இந்தியாவில் கூட 2000 பெரல்கள். முழு இந்தியாவிலும் உணவகங்களில் பாவிக்கப்படும் எண்ணெய்யை எடுத்தால் ஆண்டுக்கு 100 கோடி லிட்டர் பயோடீசல் கிடைக்குமாம் என்பது தகவல் என வைத்தியரொருவர் தெரிவித்த விடயத்தை இங்கு அடிக்கோடிட்டு காட்டுகிறேன்.

நமது நாட்டிலும் தற்போது இந்த பயோ டீசல் பேசுபொருளாகி உள்ளது. அநுராதபுரத்தை சேர்ந்த வைத்தியர் ஒருவர், தற்போது ஒரு வருட காலமாக காட்டு ஆமணக்கு விதைகளில் இருந்து பெறப்பட்ட பயோடீசலை பாவிக்கிறார் என்ற செய்தி அண்மையில் பிரபல்யம் அடைந்திருந்தது. அது போல இன்னும் சிலரின் பயோ டீசல் உற்பத்தி முயற்சிகளும் தற்போது ஊடக வெளிச்சத்திற்கு வந்திருந்தன. நமது நாட்டில், நமது பகுதிகளில் இப்படியான முயற்சிகளை ஆர்வமுள்ளவர்கள் ஆரம்பிக்க முடியும்.

இதன் மூலம் ஹோட்டல்களில், வீடுகளில் பாவித்த சமையல் எண்ணெய்யை மீண்டும் மீண்டும் உபயோகப்படுத்துவதைத் தடுக்க முடியும். அதன் மூலம் நிறைய மாரடைப்புக்களை பாரிசவாதங்களை, புற்றுநோயை, சலரோகத்தை சமூகத்திலிருந்து அகற்ற முடியும். தற்போது நாட்டில் நிலவும் பெற்றோல் டீசல் தட்டுப்பாட்டை இந்த பயோ டீசல் மூலம் ஓரளவாவது நிவர்த்திக்க முடியும். நல்ல வருமானம் கிடைக்கும். சூழல் பாதுகாப்பு. பெற்றோல் டீசல் போல இந்த பயோ டீசலில் சுற்றுச் சூழல் பாதிப்பு இல்லை என்பதால் சிறந்த மாற்றீடு என்று அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

(09 ஆம் பக்கம் பார்க்க...)

ஈழநாடு




# எரிபொருள் தட்டுப்பாட்டில்...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)



எரிபொருள் நெருக்கடிக்கு பிரதான காரணம் பிரதமரின் பயமுறுத்தும் முன்னறிவிப்புக்களும், குறித்த அமைச்சுக்கான அமைச்சரின் கருத்துக்களும் பொறுப்பற்ற விதத்தில் இடம்பெறும் பதுக்கல்களுமே. எரிவாயு விநியோகம் மற்றும் இறக்குமதி தொடர்பில் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போது பதுக்கி வைப்பவர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த ஜனாதிபதி அறிவுறுத்தியிருந்தார். நாட்டுக்கு தற்போது கிடைத்துள்ள மற்றும் அடுத்த சில நாட்களுக்குள் பெறப்படவுள்ள எரி பொருள் கையிருப்புக்களை நாடளாவிய ரீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முறையாக விநியோகிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதன்போது பணிப்புரை விடுத்திருந்தார். அது மட்டுமின்றி நிதி அமைச்சும் மத்திய வங்கியும் அரச மற்றும் தனியார் வங்கிகளுடன் இணைந்து போதியளவு எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு வசதியாக கடன் கடிதங்களை வழங்குவதற்கான திட்டங்களை வகுக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார். இதன்போதுதான் வழங்குனர்களுடனான நீண்ட கால எரிபொருள் விநியோக ஒப்பந்தங்களில் ஈடுபடுவதற்கான சாத்தியம் குறித்து சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது.

எரிபொருள் விநியோகத்தில் பொதுப் போக்குவரத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களைப் பயன்படுத்தி, தனியார் மற்றும் சுற்றுலா பேரூந்துகள் மற்றும் பாடசாலை வாகனங்களுக்கு பொலிஸாரின் மேற்பார்வையின் கீழ் எரிபொருளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்தார். ஆனால் இவைகளெல்லாம் முறையாக நடந்ததா என்ற கேள்வி




எம்மிடம் இருக்கிறது.

ஏனைய அத்தியாவசிய சேவைகளுக்காக அடையாளம் காணப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களின் மூலம் தொடர்ந்தும் எரிபொருளை விநியோகிக்கவும், இராணுவம் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு பாதுகாப்பை வழங்கவும் அரசினால் தீர்மானிக்கப்பட்டது. தேவையில்லாமல் எரிபொருளை பதுக்கி வைப்பவர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமல்படுத்தவும் பாதுகாப்பு படையினருக்கு உத்தரவிடப்பட்டது. தற்போதுள்ள எரிவாயு கையிருப்புக்களை முறையாக விநியோகிப்பதற்கும் போதுமான எரிவாயு கொள்ளளவை முன்கூட்டியே பெற்றுக்கொள்வதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்வது குறித்தும் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி அனுர திஸாநாயக்க, நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் மாபா பத்திரன, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எஸ். ஹெட்டியாராச்சி, பொலிஸ் மா அதிபர் சி.டி விக்கிரமரத்ன ஆகியோருடன் பாதுகாப்பு, எரிபொருள், மின்சாரம் மற்றும் எரிவாயு தொடர்பான நிறுவனங்களின் தலைவர்களும் கூடி கலந்துரையாடப்பட்டது. ஆனாலும் அது தேனீர் கூட்டமாக முடிந்ததே தவிர கூறிக் கொள்ளுமளவுக்கு பெரிதாக ஒன்றும் நடக்கவில்லை.

நாட்டுக்கு வரவிருந்த டீசல் மற்றும் பெற்றோல் கப்பல்கள் தாமதமாகும் என எரிசக்தி அமைச்சு தெரிவித்தால் அடுத்த நாள் காலை எரிபொருள் நுகர்வோரினால் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்னால் உள்ள வீதிகள் முடங்கும் அபாயம் நாட்டில் எல்லா இடங்களிலும் நிலவுகிறது. பெற்றோல் கிடைக்குமோ அல்லது கிடைக்காதோ என்ற ஏக்கத்தில் தற்போது எரிபொருளுக்காக நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் அதிகாலை 3 மணி தொடக்கம் எரிபொருளை பெற்றுக் கொள்ள மக்கள் நீண்ட வரிசைகளில் காணப்படுகின்றனர் எரிபொருளுக்காக தினமும் மக்கள் காத்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. நாட்டில் பெரும்பான்மை இடங்களில் பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பல்வேறு எரிபொருளுக்காக நீண்ட வரிசையில் காத்திருப்பதுடன் எரிபொருள் உரிமையாளருக்கும் பொது மக்களுக்கும் முறுகல் நிலையும் ஏற்படுகின்றது.

இங்கு பொலிஸாரும் இராணுவத்தினரும் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ள போதிலும் மக்கள் பொறுமையை இழக்க நேரிடுகிறது. இதனால் பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

சில எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு சுமார் 5 தொடக்கம் 10 நாட்களுக்குப் பின்னர் மண்ணெண்ணெய் விநியோகிக்கபடுவதுடன் ஒருவருக்கு 300 முதல் 500 ரூபாய்க்கு மாத்திரமே வழங்கப்படுகின்றது.

நூற்றுக்கணக்கான பொது மக்கள் நீண்ட வரிசையில் நின்று அசௌகரியங்களுக்கு மத்தியில் மண்ணெண்ணெய்யை கொள்வனவு செய்வதையும் அவதானிக்க முடிந்தது. சில மாவட்டங்களில் அம்மாவட்ட அர சாங்க அதிபரின் வழிகாட்டலில் பிரதேச செயலக ரீதியாக எரிபொருள் நிரப்பு நிலை யங்களில் பிரதேச செயலாளர்களினால் அட்டைகள் வழங்கப்பட்டு குறித்த அட் டைகளுக்கு பெற்றோல் விநியோ கிக்கப்படுகின்றது.

இதனால் அங்குள்ள பல்வேறு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அரச திணைக்களங்களில் கடமை புரியும் உத்தியோகத்தர்கள் மிக நீண்ட வரிசைகளில் நின்று பெற்றோலைப் பெற்றுக் கொண்டுள்ளனர். மேலும் பல எரிபொருள் நிரப்பு நிலையங்களுடான டீசல் விநியோகமும் மேற்கொள்ளப்பட்டது. சுமார் ஒரு கிலோ மீற்றருக்கும் அதிகமான தூரத்தில் மிக நீண்ட வரிசையில் வாகனங்களுடன் காத்து நின்று டீசலைப் பெற்றுக் கொண்டனர்.

பல பகுதிகளிலும் எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் பெற்றோலை பதுக்கி வைத்திருப்பதாக தெரிவித்து பொது மக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவது இக்காலத்திலும் சிலரின் மனம் எப்படி இருக்கிறது என்பதை



அப்பட்டமாக காட்டுகிறது.

எரிபொருள் தேவை அதிகரித்துள்ளதுடன் மக்கள் நீண்ட வரிசைகளில் பல மணி நேரமாக காத்திருந்து எரிபொருட்களை பெற்று செல்கின்றனர். எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குறிப்பிட்ட எரிபொருட்கள் விநியோகிக்கப்படும் என பொற்றோலிய கூட்டுத்தாபனம் முன்கூட்டியே அறிவித்து வருகின்ற நிலையில் எரிபொருளை பெற்றுக்கொள்ள காலநேரமெதுவுமின்றி மக்கள் நீண்ட வரிசைகளில் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசையில் காத்திருக்கின்றனர். அதன் போது அனைவருக்கும் எரிபொருட்களை பகிர்ந்தளிக்கும் முகமாக சில எரிபொருள் நிரப்பு நிலையங்கள் 1000 முதல் 2000 ரூபாய்க்கே எரிபொருட்கள் வழங்கி வைக்கப்படுகின்றது. அதனால் பல மணி நேர காத்திருப்பின் பின்னரும் மக்களுக்கு 2 முதல் 3



லீட்டர் வரையான எரிபொருட்களே பெற முடிந்துள்ளதாக குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

இது தவிர வேளாண்மை அறுவடை, விவசாயிகளின் விவசாய நடவடிக்கை பாதிப்பு, மீனவர்களுக்கு எரிபொருட்களை சீராக பெற்றுக்கொள்ள சிரமப்படுதல், போக்குவரத்தில் சிரமம், சேவைகள் வழங்குவதில் தாமதம், உட்பட பல்வேறு காரணங்களை தெரிவிக்கும் மக்கள் இதனால் பல்வேறு அசௌகரியங்களையும், விலையேற்றங்களையும் சந்தித்துள்ளனர். எரிபொருள் நிரப்பு நிலையங்களில் முறைகேடாக எரிபொருள் விநியோகம் நடைபெறுவதாகவும் இவ்விடயங்களில் அரசாங்க அதிகாரிகள் பாராமுகமாக இருப்பதாகவும் தெரிவித்து எரிபொருளுக்கு காத்திருந்தோர்கள் அரச உயரதிகாரிகளை சந்தித்து எரிபொருள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்த சம்பவங்களும் ஆங்காங்கே அரங்கேறின.

இரவு நேரங்களில் முறைகேடாக எரிபொருள் வழங்கப்படுவதாகவும், பாதுகாப்புக்கு நிற்கும் பாதுகாப்புப் படையினர் இந்த செயலுக்கு துணைபோவதாகவும், பொலிஸார் தமது நண்பர்களின் வாகனங்களை கொண்டுவந்து எரிபொருள் நிரப்பி கொடுப்பதாகவும் தெரிவித்த பொதுமக்கள் எரிபொருள் வழங்குவதற்கு ஒரு முறையான பொறிமுறையை உருவாக்குமாறு சம்பந்தப்பட்டவர்களை கேட்டுக்கொண்டுள்ளனர்.


இப்படியான கோரிக்கைகளுக்கு இணங்க சாய்ந்தமருது பிரதேச பிரச்சினைக்கு தீர்வை காணும் நோக்கில் சாய்ந்தமருதிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் சாய்ந்தமருது - மாளிகைக்காடு பிரதேச மக்களுக்கு மட்டும் கிழமையில் ஒருநாள் தனியாக எரிபொருள் வழங்க பிரதேச செயலத்தில் பிரதேச செயலாளர், ஜும்ஆப் பள்ளி வாசல் நிர்வாகிகள், அரச உயர் அதிகாரிகள், பொலிஸார், எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டு நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் ஏனைய நாட்களில் வழமை போன்று சகலருக்கும் எரிபொருள் வழங்கவும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் அதை நடைமுறைப்படுத்துவதில் நிறைய சிக்கல்கள் இருந்ததை எண்ணி எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் அந்த கூற்றை நிராகரித்தார். இப்படி எந்தவகையான முடிவையும் கண்களை மூடிக்கொண்டு எடுக்கும் நிலைக்கு இலங்கை எரிபொருள் தட்டுப்பாடு மாறியிருக்கிறது.

தேர்தல் வாக்குண்டியலுக்காக எங்களுக்கு அரபு நாட்டு எண்ணெய் தேவையில்லை என்ற இனவாத சிந்தனை கொண்டோர்களை நாடு இப்போது தேடிக் கொண்டிருக்கிறது. இனவாதமாக செயற்பட ஜனாதிபதிக்கும், அமைச்சரவைக்கு, அரசுக்கும் ஆலோசனை வழங்கியதுடன் மட்டுமல்லாது பல நூறு முஸ்லிம் ஜனாஸாக்களை எரித்தவர்கள் இப்பொது இருக்கும் நாடடின் நிலைக்கு பொறுப்புக்கூற கடமைப்பட்டுள்ளார்கள். இவர்களின் முறையற்ற முகாமைத்துவம் தான் நாட்டின் இன்றைய நிலைக்கு காரணம். உதவியாக, நன்கொடையாக வந்த நிறைய அரபு நாட்டின் ஸதக்காக்களை இனவாத சாயம் பூசி, தீவிரவாத முத்திரை குத்தியோர் இன்று டொலர் தேடியலைவதும், எண்ணெய் பெற அரபு தேசங்களுக்கு படையெடுப்பதும் ஆச்சரியமாக இல்லை. நகைப்புக்குரியதாகவே மாறியிருக்கிறது.

470 ரூபாய்க்கு சந்தையிலும், 1200 ரூபாய்க்கு மேல் கருப்பு சந்தையிலும் பெற்றோலை வாங்கும் சேவை வழங்குநர்களும், வியாபாரி களும் அதன் மூலம் வழங் கும் சேவை கட்டணத்தை பலமடங்கு கூட்டியிருப்பதனாலும், விலைகள் ஏறியிருப்பதனாலும் நேரடியாக பாதிக்கப்பட்டது சர்வதேச வங்கிகளில் கருப்புப்பணத்தை பதுக்கி வைத்திருப்பார்கள் அல்ல. சாதாரண மக்களே.


# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

18) 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

19)  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..........................................

20) தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122 , 124 , 126 , ............. , ...........    ii) 18 , 15 , 12 , ............. , ...........

21) 3, 9, 14, 6, 10, 12, — பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

..................................................................

22) ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

..........................................................................................

23) ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

..................................................................

24) பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

..................................................................

25) 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ..................................................

26) **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | | ............ | ......... |

27) கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

.......................................................

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?




.......................................................

29) ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

.......................................................    (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)     2)     3) 

31) வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி    2) இரணைமடுக்குளம்    3) பராக்கிரமபாகு சமுத்திரம்

32) உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டி எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம்    2) உதிப்பு    3) உடலைத் தளர்த்தல்

33) தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன்    2) வாளேந்திய சிங்கம்    3) நெற்கதிர்

34) பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976    2) 1851    3) 1815

35) வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு    2) இறப்பர், தாழம்பூ    3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6    2) 8
**19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130    2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745
**23.** 455
**24.** 1l 100ml / 1100ml
**25.** ரூபாய் 144.00
**26.** 1) 190    2) 100    3) 290
**27.** 15 : 30
**28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1    **31.** 2    **32.** 3
**33.** 2    **34.** 3    **35.** 2

### கல்வி tv CHANNEL-1 — 06.07.2022 புதன்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் மறு ஒளிபரப்பு | மாதிரி வினாத்தாள் மறுஒளிபரப்பு-LIVE கணிதம் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

### கல்வி tv CHANNEL - 2 — 06.07.2022 புதன்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# 5 நாள் காத்திருந்த மக்கள் ஏமாற்றம்!

## ஊறணி எரிபொருள் நிலையத்தில் குழப்பம்



மட்டக்களப்பு ஊறணியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த ஐந்து தினங்களாக எரிபொருளுக்காக காத்திருந்த மக்கள் எரிபொருள் வழங்கப்படாது என தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து அப்பகுதியில் பதற்ற நிலைமை ஏற்பட்டது.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருட்கள் பதுக்கிவைக்கப்பட்டு தமதுக்கு கடந்த ஐந்து தினங்களாக வழங்கப்படாமல் இழுத்தடிப்புச் செய்யப்படுவதாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டினார்கள். இதன்போது அங்கு வருகை தந்த இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகள் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையங்களில் உள்ள எரிபொருள் சேமிப்புத் தாங்கிகளை சோதனையிட்டனர்.

எனினும் அங்கு எந்த எரிபொருளும் இருக்காமை உறுதிப்படுத்தப்பட்டதுடன் எரிபொருள் நிரப்பு நிலையமும் சோதனையிடப்பட்டதுடன் அங்கும் எந்தவித எரிபொருளும் கைப்பற்றப்படாத நிலையில் அது தொடர்பில் அங்கு மக்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

தாங்கள் ஐந்து தினங்களாக வரிசையில் எரிபொருளுக்காக காத்திருந்தபோதிலும் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தினரால் தாங்கள் ஏமாற்றப்பட்டதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

எனினும் தமது எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு வந்த எரிபொருட்கள் அனைவருக்கும் பகிரப்பட்டதாகவும் தாங்கள் எந்தவித ஏமாற்றத்தையும் செய்யவில்லையெனவும் நிலையத்தினர் தெரிவித்தனர். (அ)

# தற்சார்புப் பொருளாதாரத்தை தமிழர் கட்டியெழுப்பவேண்டும்

## மட்டக்களப்பு மாநகர முதல்வர் கோரிக்கை

மட்டக்களப்பு, ஜூலை. 06

**பொருளாதார நெருக்கடியாக இந்த காலத்தில் தமிழர்கள் தற்சார்பு பொருளாதாரத்தை கட்டியெழுப்பவேண்டிய இக்கட்டான காலத்தில் உள்ளதாக மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன் தெரிவித்தார்.**

கிழக்கு மாகாணத்தில் வாழ்வாதார மேம்பாடு மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்கான உதவிகளை வழங்கி வரும் சுவிஸ் உதயம் அமைப்பின் தலைமையகத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

மட்டக்களப்பு திராய்மடுப் பகுதியில் சுவிஸை தலைமையகமாகவும் கிழக்கு மாகாணத்தை செயற்பாட்டு ரீதியான இடமாகவும் கொண்டுள்ள சுவிஸ் உதயம் அமைப்பிற்கான தலைமையகத்திற்கான கட்டடம் அமைக்கப்படவுள்ளது.



சுவிஸ் உதயம் அமைப்பின் கிழக்கு மாகாணத் தலைவர் மு. விமலநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதிகளாக மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தி.சரவணபவன், சுவிஸ் உதயம் தாய் சங்கத்தின் செயலாளர் அம்பலவாணர் ராஜன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சுவிஸ் உதயம் அமைப்பின் கிழக்கு மாகாண செயலாளர் திருமதி ரொமிலா செங்கமலனின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதித்தலைவர் ஓய்வுநிலை உதவிக்கல்விப் பணிப்பாளர் க.வரதராஜன் பொருளாளர் பாவாணர் அக்கரைப்பாக்கியன், பிரதிச்செயலாளர் நடனசபேசன் உட்பட சுவிஸ் உதயம் அமைப்பின் கிழக்கு மாகாண நிர்வாக உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

கிழக்கு மாகாணத்தில் வாழ்வாதார மேம்பாட்டிற்காகவும் கல்வி வளர்ச்சிக்காகவும் பல்வேறு உதவி திட்டங்களை வழங்கிவரும் சுவிஸ் உதயம் அமைப்பு தனது சேவையினை விரிவுபடுத்தும் வகையில் இந்த அலுவலகத்தினை அமைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த மாநகர முதல்வர்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்சார்பு பொருளாதாரத்தினை முன்னெடுக்கும்போது எங்களுக்கு தேவையானவற்றை நாங்களே உற்பத்தி செய் யும் வகையிலும் அதன் மூலம் எமது பொருளாதாரத்தை ஓரளவு பூர்த்தி செய்யக்கூடியதாகயிருக்கும்.

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து வெற்றுக் காணியிலும் பயிர்ச்செய்கையினை ஊக்குவிக்கும் வகையிலும் அதன்மூலம் தமது தேவையினை பூர்த்திசெய்யும் வகையிலான திட்டத்தை முன்னெடுப்பது குறித்தும் மாநகரசபையில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி ஓரளவாவது உற்பத்திகளை மாநகருக்குள் பெறுவதற்கான முயற்சியை முன்னெடுக்க வேண்டும்-என்றார். (அ)

# கல்முனை மாநகர நிர்வாகத்துக்கு எதிராக 7 ஆம் திகதி வேலை நிறுத்தப் போராட்டம்

## அரசாங்க பொது ஊழியர் சங்கம் திட்டவட்டம்

அம்பாறை, ஜூலை. 06

கல்முனை மாநகர சபை நிர்வாகத்துக்கு எதிராக நாளை வியாழக்கிழமை அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் வேலை நிறுத்தப் போராட்டம் நடத்த தீர்மானித்துள்ளது. கல்முனை மாநகர சபை நிர்வாகத்தால் ஊழியர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டு வருகின்ற கெடுபிடிகளை ஆட்சேபித்து போராட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்து உள்ளனர் என்று இத்தொழிற்சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் தெரிவித்தார்.

ஊழியர்கள் மீதான கெடுபிடிகளை தீர்த்து வைக்க மூன்று நாட்கள் அவகாசம் வழங்கி உள்ளனர் என்றும் உரிய தீர்வு கிடைக்க தவறுகின்ற பட்சத்தில் போராட்டம் நிச்சயம் இடம்பெறும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் உயர்பீடம் கல்முனையில் உள்ள தலைமையகத்தில் கூடி இத்தீர்மானத்தை எடுத்தது என்றும் தெரிவித்த அவர், இதில் எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்களையும் குறிப்பிட்டார்.

அதனடிப்படையில் அத்தியாவசிய சேவைகள் வழங்குநர்களாக ஊடகவியலாளர்கள், நீர் வழங்கல் வடிகால் சபையினர் ஆகியோரையும் பிரகடனப்படுத்தி முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் உள்ளிட்டவற்றை வழங்க வேண்டும், உரிய மாவட்ட அரசாங்க அதிபர்களின் அறிவுறுத்தல்களுக்கு அமைய அந்தந்த பிரதேச செயலாளர்களின் கண்காணிப்பில் எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பதவி காலம் முடிவடைந்த பின்னரும் மேலும் ஒரு வருடத்துக்கு உள்ளூராட்சி சபைகளின் காலம் நீடிக்கப்பட்டு உள்ளதால் பொதுமக்களின் பல கோடி ரூபாய் வரி பணம் விரயம் செய்யப்படுகிறது. இதை தவிர்ப்பதற்காக இச்சபைகளுக்கு விசேட ஆணையாளர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாக அவர் கூறினார். (அ)

# மட்டக்களப்பை அடைந்தது கதிர்காமம் பாதயாத்திரை

மட்டக்களப்பு, ஜூலை. 06

தொண்டமனாறு செல்வச்சந்நிதியில் ஆரம்பமான கதிர்காமம் பாதயாத்திரை நேற்று முன்தினம் மாலை மட்டக்களப்பை சென்றடைந்ததுடன் நேற்றுக் காலை கதிர்காமம் நோக்கி ஆரம்பமானது.

கடந்த மாதம் 04ஆம் திகதி செல்வசந்நிதி முருகன் ஆலயத்தில் நடைபெற்ற வழிபாடுகளைத் தொடர்ந்து பாதயாத்திரை ஆரம்பமானது. இம்மாதம் கதிர்காமத்தின் கொடியேற்றம் 29ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் இந்த பாதையாத்திரை கதிர்காமத்தை நோக்கி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



நேற்று முன் தினம் மாலை மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்துக்கு சென்ற பாதயாத்திரைக் குழுவினர் நேற்று காலை ஆலயத்தில் நடைபெற்ற சிறப்பு வழிபாடுகள், கூட்டுப் பிரார்த்தனைகளை தொடர்ந்து கதிர்காமம் நோக்கி தமது பாதயாத்திரையை ஆரம்பித்தனர். (அ)

# அக்கரைப்பற்று ஸ்ரீ வம்மியடிப் பிள்ளையார் ஆனிப்பௌர்ணமி மகோற்சவ கொடியேற்றம்



மட்டக்களப்பு, ஜூலை. 06

அக்கரைப்பற்று ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார் ஆலயத்தின் ஆனிப்பௌர்ணமி மகோற்சவத்தை முன்னிட்டதான கொடியேற்றம் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

சிவபூமி என அழைக்கப்படும் ஈழமணித்திருநாட்டின் தென்கிழக்கில் வரலாற்றுச் சிறப்புடன் இயற்கை எழில் நிறைந்த அக்கரைப்பற்று பதிதனில் கோயில் கொண்டு அருள்பாலிக்கும் ஸ்ரீ வம்மியடிப் பிள்ளையார் ஆலயத்தில் கடந்த இரு வருடம் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மகோற்சவம் இடம்பெறாத நிலையில் இவ்வருடம் மகோற்சவம் இடம்பெறுகின்றது.

நேற்று முன் தினம் அக்கரைப்பற்று ஸ்ரீ வீரமகாளியம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜையினை தொடர்ந்து அங்கிருந்து கொடிச் சீலை எடுத்துவரும் நிகழ்வு இடம்பெற்றது. மங்கள வாத்தியங்கள் முழங்க பக்தர்கள் சகிதம் கொடிச்சீலை ஆலயத்திற்கு கொண்டுவரப்பட்டது.

பின்னர் அங்கு யாக பூசைகள் நடைபெற்றதுடன் தொடர்ந்து ஆலயத்தில் மூலமூர்த்திக்கான பூசை இடம்பெற்றதுடன் வசந்த மண்டபத்தில் வீற்றிருக்கும் விநாயகப்பெருமானுக்கு விசேட அலங்கார பூசை நடைபெற்றதன் பின்னர் எழுந்தருளிய விநாயகப்பெருமான் அடியார்களினால் வீதி வலமாக அழைத்துச் செல்லப்பட்டு கொடிக்கம்பத்தின் அருகே அமர்த்தப்பட்டார்.

கொடிக்தம்பம் அருகே இடம்பெற்ற பூசைகளின் பின்பு நாதஸ்வர மேள ஒலி முழங்க அடியார்களின் பிரார்த்தனையுடன் கொடியேற்றம் நடைபெற்றது. (அ)



## நத்தைகளால் அமெரிக்காவின் ஒரு பகுதி தனிமைப்படுத்தல்!

நியூயோர்க், ஜூலை. 06

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் உள்ள பஸ்கோ வட்டாரத்தில் இராட்சத ஆபிரிக்க நத்தைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதனால் அந்த வட்டாரத்தில் முடக்கநிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

20.3 சென்டிமீற்றர் வரை வளரக்கூடிய இராட்சத ஆபிரிக்க நத்தைகள் விரைவில் பெருகிவரும் நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவை ஆண்டுக்கு 2,500 முட்டைகள் வரை உற்பத்தி செய்யக்கூடியவை என்பதால் நத்தைகளைக் கட்டுக்குள் வைப்பது சிரமம்.

அத்துடன் அவ்வகை நத்தைகள் மனிதர்களுக்குச் சுகாதார அபாயத்தை ஏற்படுத்தக்கூடியவை.

அவற்றிடம் உள்ள ஒட்டுண்ணி, மனிதர்களுக்கு மூளைக்காய்ச்சலை ஏற்படுத்தக்கூடும் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

இந்தவகை நத்தைகளை செல்லப்பிராணிகளாக வளர்ப்பது அமெரிக்காவில் தடை செய்யப்பட்டுள்ளது. என்றாலும், பலர் அதை மீறி வளர்க்கிறார்கள். செல்லப் பிராணியாக அதை வளர்த்தவர்கள் காட்டுக்குள் வீசியதால் அல்லது அவர்களிடமிருந்து நத்தைகள் தவறிச் சென்று விரைவாக பெருகியிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

தனிமைப்படுத்தல் ஜூன் 25 முதல் அமலுக்கு வந்தது, மேலும் குடியிருப்பாளர்கள் நத்தை அல்லது தாவரங்கள் மற்றும் மண் போன்ற தொடர்புடைய பொருட்களை தனிமைப்படுத்தப்பட்ட பகுதிக்குள் அல்லது வெளியே கொண்டு செல்வது தடை செய்யப்பட்டுள்ளது.

நத்தையை கண்டவர்கள் உடனடியாக அறிவிப்பதற்கு ஹொட் லைன் இலக்கம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நத்தைகளை 3 வருடங்களுக்குள் அழிக்கும் வேலைத்திட்டத்தை அதிகாரிகள் ஆரம்பித்துள்ளனர். நத்தைகளை வேட்டையாடுதல், நிலத்தில் ஒரு வகை பூச்சிக்கொல்லி விசுறுதல் உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர். (அ)

# அமெ. சுதந்திர தின அணிவகுப்பில் சூடு!

## ஆறு பேர் உயிரிழப்பு! ஏராளமானோர் படுகாயம் தாக்குதலாளி தப்பி ஓட்டம்

நியூயோர்க்,.ஜூலை. 06

அமெரிக்காவில் ஜூலை 4 சுதந்திர தினத்தை ஒட்டி நடந்த அணிவகுப்பு ஒன்றில் கலந்து கொண்ட பொது மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருக்கிறது.

சிக்காகோவின் புற நகரில் சுதந்திர தின அணிவகுப்பு ஆரம்பமான இடத்துக்கு அருகே- ஹைலான்ட் பூங்கா பகுதியில் - இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது. அப்பகுதியில் குறைந்தது ஆறு பேர் உயிரிழந்துள்ளனர். சுமார் முப்பது பேர் காயங்களுடன் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

சிறு குழந்தைகளும் தாக்குதலில் சிக்கியுள்ளனர் என்று கூறப்படுகிறது.

பொலிஸாரின் தகவல்களின்படி 18-20 வயது மதிக்கத்தக்க-ஆயுதம் தாங்கிய - ஆபத்தான - வெள்ளை நிற இளைஞர் ஒருவரே தாக்குதலாளி என்றும் சனக் கூட்டத்தின் மீது சுட்டுவிட்டு அங்கிருந்து தப்பிவிட்டார் என்றும் கூறப்படுகிறது. அவரைப் பிடிப்பதற்காகப் பெரும் தேடுதல் வேட்டை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆபத்தான அந்த நபர் குறித்து சிக்காகோ சுற்றுப் புறங்களில் வசிப்போரைப் பொலிஸார் எச்சரித்திருக்கின்றனர். வீடுகளில் தங்கியிருக்குமாறு அப் பிரதேச மக்கள் கேட்கப்பட்டுள்ளனர். அருகே உள்ள கடற்கரைப் பகுதிகள்



உடனடியாகவே மூடப்பட்டுப் பொலீஸ் கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டது.

தாக்குதலாளி அங்குள்ள கட்டடம் ஒன்றின் கூரைப் பகுதியில் ஒளிந்திருந்தே முதலில் சுட்டுள்ளார் என்று தகவல் வெளிவந்துள்ளது.

பின்னர் அவர் துப்பாக்கி ஒன்றைக் கைவிட்டுவிட்டே தப்பியுள்ளார்.

சிக்காகோவின் நகர மையத்தில் இருந்து 25 கிலோ மீற்றர்கள் தொலைவில் ஹைலான்ட் பூங்கா அமைந்துள்ள பகுதி, குற்றச் செயல்கள் குறைந்த ஒரு பிரதேசம் ஆகும். (அ)

# பதவி விலகப்போகிறேனா? பாப்பரசர் பிரான்சிஸ் விளக்கம்



வத்திக்கான் சிற்றி, ஜூலை. 06

எதிர்காலத்தில் தான் பதவி விலகத் திட்டமிட்டுள்ளதாக வெளியான செய்திகளை நிராகரித்த பாப்பரசர் பிரான்சிஸ், இம்மாதம் கனடாவுக்குச் செல்ல இருப்பதாகவும், அதன்பிறகு கூடிய விரைவில் ரஷ்யா மற்றும் உக்ரைன் செல்ல முடியும் என நம்புவதாகவும் கூறினார்.

வத்திக்கானிலுள்ள தனது இல்லத்தில் ஒரு பிரத்யேக நேர்காணலில், தனக்கு புற்றுநோய் இருப்பதாக வெளியான வதந்திகளை பாப்பரசர் பிரான்சிஸ் மறுத்தார்.

மேலும் மருத்துவர்கள் “அதைப் பற்றி என்னிடம் எதுவும் சொல்லவில்லை” என்று கேலி செய்தார்.

85 வயதான பாப்பரசர் கடந்த மாதம் அமெரிக்க உச்ச நீதிமன்ற தீர்ப்பைத் தொடர்ந்து கருக்கலைப்புக்கான தனது கண்டனத்தை மீண்டும் கூறினார்.

ஒகஸ்ட் பிற்பகுதியில், புதிய வத்திக்கான் அரசியலமைப்பைப் பற்றி விவாதிக்க உலகின் கர்தினால்களுடனான சந்திப்புகள், புதிய கர்தினால்கள் பதவியேற்கும் விழா மற்றும் இத்தாலிய நகரமான எல்’அகிலாவிற்கு விஜயம் செய்வது உட்பட ஒகஸ்ட் மாத இறுதியில் நடக்கும் நிகழ்வுகளின் இணைப்பு பாப்பரசரின் பதவி விலகலிற்கான ஒரு முன்னறிவிப்பை ஏற்படுத்தக்கூடும் என்று ஊடகங்களில் வதந்திகள் பரவியிருந்தன.

1294 இல் பாப்பரசர் பதவியை ராஜினாமா செய்த பாப்பரசர் ஐந்தாம் செலஸ்டினுடன் எல்’அகிலா நகர் தொடர்பு கொண்டுள்ளது. பாப்பரசர் 16ஆம் பெனடிக்ட் 2013 இல் பதவி விலகுவதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இதே நகரத்துக்கு விஜயம் செய்தார்.

முழங்கால் காயம் காரணமாக அவரது கொங்கோ ஜனநாயகக் குடியரசு மற்றும் தெற்கு சூடானுக்கான பயணத்தை ரத்து செய்யவேண்டியிருந்தது. அந்த பயணங்களை இரத்து செய்யாவிட்டால் ஜூலை 24-30 வரை கனடாவுக்குச் செல்வதையும் அவர் இழக்க நேரிடும் என்று மருத்துவர்கள் தெரிவித்ததாக குறிப்பிட்டார்.

20 நாட்கள் சிகிச்சை மற்றும் அவரது வலது முழங்காலுக்கு ஓய்வு அளிக்கப்பட்ட பின் கனடா பயணத்தை மேற்கொள்வார்.

ஆபிரிக்கா பயணத்தை ரத்து செய்வ தற்கான முடிவு தனக்கு “மிகவும் துன்பத்தை” ஏற்படுத்திய தாக அவர் கூறினார். குறிப்பாக இரு நாடுகளிலும் அமைதியை மேம்படுத்த விரும்பியதாக குறிப்பிட்டார்.

அவர் எப்படி இருக்கிறார் என்று நேர்காணல் செய்தவர் கேட்டதற்கு, நான் இன்னும் உயிருடன் இருக்கிறேன்! என்று பாப்பரசர் கேலி செய்தார்.

அவர் முதன்முறையாக பொதுவில் தனது நோயின் விவரங்களைக் கூறினார், ஒரு தசைநார் வீக்கமடைந்ததை தொடர்ந்து, முழங்காலில் சிறிய எலும்பு முறிவு ஏற்பட்டதாகக் கூறினார்.

நான் நன்றாக இருக்கிறேன், நான் மெதுவாக குணமடைந்து வருகிறேன் என்று அவர் கூறினார்,

ஒரு வருடத்திற்கு முன்பு, வயதானவர்களுக்கு ஏற்படும் டைவர்டிக்யூலிட்டிஸ் என்ற நோயின் காரணமாக, தனது பெருங்குடலின் ஒரு பகுதியை ஆறு மணி நேர அறுவைச் சிகிச்சை செய்து அகற்றியபோது, புற்றுநோய் கண்டறியப்பட்டது என்ற வதந்திகளையும் பிரான்சிஸ் நிராகரித்தார்.

கடந்த ஆண்டு அறுவைச் சிகிச்சையில் பொது மயக்க மருந்து எதிர்மறையான பக்க விளைவுகளை ஏற்படுத்தியதால், தனது முழங்காலில் அறுவைச் சிகிச்சை செய்ய விரும்பவில்லை என்று அவர் கூறினார்.

“நான் உக்ரைனுக்கு செல்ல விரும்புகிறேன். முதலில் மொஸ்கோ செல்ல விரும்பினேன். இதைப் பற்றி நாங்கள் செய்திகளைப் பரிமாறிக் கொண்டோம், ஏனென்றால் ரஷ்ய ஜனாதிபதி எனக்கு ஒரு சிறிய சாளரத்தைக் கொடுத்தால், அமைதிக்கான காரணத்திற்காக சேவை செய்ய இப்போது அது சாத்தியம். நான் கனடாவிலிருந்து திரும்பி வந்த பிறகு, நான் உக்ரைனுக்குச் செல்ல முடியும் என்று அவர் கூறினார். (அ)

## இன அழிப்பில் தப்பிய குழந்தை பிரான்ஸின் அமைச்சரவையில்!



பாரிஸ், ஜூலை 06

பிரான்ஸ் அமைச்சரவை மாற்றங்களில் பத்துப் பேர் பிரதி அமைச்சுப் பதவிகளுக்கு நிகரான - அரசுச் செயலாளர்களாக - நியமிக்கப்பட்டிருக் கின்றனர். அவர்களில் ஒருவர் 32 வயதான ஹெர்வ் பேர்வீல்.

அவர் பிரான்ஸின் கடற் பிராந்தியங்களுக்குப் பொறுப்பான அரசுச் செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பிரெஞ்சு கல்வியியலாளர்கள் மத்தியில் மதிக்கப்படுகின்ற இளம் பொருளியல்துறை வல்லுநரான பேர்வீலின் வாழ்க்கைப் பின்னணி பிரான்ஸ் - றுவாண்டா இரு நாட்டு வரலாற்று உறவுகளுடன் பின்னிப் பிணைந்தது.

மத்திய ஆபிரிக்க நாடாகிய றுவாண்டாவின் கிஹாலியில் துட்சி இனக் குடும்பம் ஒன்றில் 1990 இல் பிறந்தவர். பெற்றோரை இழந்து சிறுவர் பராமரிப்பகம் ஒன்றில் வசித்த அவருக்கு நான்கு வயதான சமயத்தில் அங்கு 1994 இல் துட்சி இனத்தவர்கள் மீது நிகழ்த்தப்பட்ட பெரும் இனப்படுகொலையில் உயிர் தப்பிப்பிழைத்து பிரெஞ்சுப் படையினரால் அங்கிருந்து மீட்கப்பட்ட நூற்றுக்கணக்கான குழந்தைகளில் ஒருவராகப் பிரான்ஸ் மண்ணுக்கு வந்திருந்தார்.

மக்ரோனின் இளையோர் அணியில் இணைந்து அரசியலில் ஈடுபட்ட ஹெர்வ் பேர்வீல், 2017 இல் ஓர் இளம் உறுப்பினராக பாராளுமன்றத்துக்குத் தெரிவாகியிருந்தார். அக்கட்சியின் பேச்சாளராகவும் விளங்கினார்.

பிரான்ஸின் சயன்சஸ் போ, லண்டன் பொருளியல் கல்லூரி ஆகிய கல்வி நிறுவனங்களில் அரசியல், பொருளாதாரத் துறைகளில் பட்டங்கள் பெற்றிருந்த அவர் பிரான்ஸின் கோட்ஸ் டி அர்மோர் தேர்தல் தொகுதியில் இருந்து தெரிவாகித் தொடர்ந்து எம். பி பதவியில் நீடித்துவருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)




# ஆஸிக்கு எதிரான டெஸ்ட் மஹீஷ், துனித் அணியில்!

*கொழும்பு, ஜூலை 06*

அவுஸ்திரேலியா அணிக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டிக்கான இலங்கை அணியில் சுழற்பந்து வீச்சாளர்கள் மஹீஷ் தீக்ஷன, துனித் வெல்லாலகே, லக்ஷித மனசிங்க ஆகிய சுழல்பந்து வீச்சாளர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்த மூவரில் மனசிங்கவைத் தவிர மற்றைய இருவரும் சர்வதேச வெள்ளைப்பந்து போட்டிகளில் இலங்கைக்காக விளையாடியுள்ளனர். ஆனால், மூவரும் இதுவரை டெஸ்ட் அறிமுகம் பெறவில்லை.

முதல் டெஸ்டில் விளையாடிய லசித் எம்புல்தெனிய இலங்கை அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாலும் பிரவீன் ஜயவிக்ரம கோவிட் தொற்றால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டமையாலும் இந்த மூவரில் ஒருவர் 2ஆவது டெஸ்டில் அறிமுகமாவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இடதுகை சுழல்பந்துவீச்சாளரான 19 வயதுடைய துனித் வெல்லாலகே, அவுஸ்திரேலியாவுக்கு எதிரான சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடரில் 9 விக்கெட்களை கைப்பற்றி அதிக விக்கெட்களைக் கைப்பற்றியோர் வரிசையில் முதலிடத்தில் இருந்தார்.

மஹீஷ் தீக்ஷன 4 விக்கெட்களை வீழ்த்திய போதிலும் அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்கினார்.

இதனிடையே, கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட அஞ்சலோ மத்தியூஸ் அதிலிருந்து மீண்டுள்ளார். இதனால், அவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பங்கேற்பார் என்று அறிய வருகின்றது.

இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலியில் ஆரம்பமாகிறது. (ஐ)

# இந்தியாவுடனான டெஸ்ட்; இங்கிலாந்து அபார வெற்றி!

*பர்மிங்ஹாம், ஜூலை 06*

இந்தியா - இங்கிலாந்து மோதிய கடைசி டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 7 விக்கெட்களால் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் 2 - 2 என்ற கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

பர்மிங்ஹாமில் நடைபெற்று வரும் 5ஆவது டெஸ்ட் போட்டியில் முதல் இனிங்ஸில் இந்தியா 416 ஓட்டங்களும், இங்கிலாந்து 284 ஓட்டங்களும் எடுத்தன.

132 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2ஆவது இனிங்ஸை விளையாடிய இந்திய அணி 81.5 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 245 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதில், செதேஷ்வர் புஜாரா 66, ரிஷப் பந்த் 57 ஓட்டங்களை எடுத்திருந்தனர்.

இங்கிலாந்தின் பந்துவீச்சில் பென் ஸ்ரோக்ஸ் 4 விக்கெட்களையும், பிரோட், பொட்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் வீழ்த்தியிருந்தனர்.

இந்நிலையில், 378 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடியது இங்கிலாந்து அணி.

அலெக்ஸ் லீஸ், ஷாக் கிராவ்லி ஆகியோர் தொடக்கம் கொடுத்தனர். இருவரும் சிறப்பான ஆரம்பத்தை ஏற்படுத்தினர். எனினும், கிராவ்லி 46 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்கவே, அடுத்து வந்த ஒல்லி போப் ஓட்டம் எதையும் பெறாமலே வெளியேறினார்.

இதையடுத்து, ஜோ ரூட் ஆடுகளம் புகுந்தார். அவர் தனது வழக்கமான பாணியில் அடித்து ஆடினார். இந்நிலையில், லீஸ் 56 ஓட்டங்களுடன் ரன் அவுட்டாக பெவிலியன் திரும்பினார்.

ரூட்டுடன் அடுத்து இணைந்த பெயர்ஸ்ரோ சிறப்பான இணைப்பாட்டத்தை ஏற்படுத்தினார். இதனால், இங்கிலாந்து வெற்றியை நோக்கி மெல்லமெல்ல நகர ஆரம்பித்தது.

4ஆம் நாள் ஆட்டம் முடிவடைந்தபோது இங்கிலாந்து அணி 3 விக்கெட்கள் இழப்புக்கு 259 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில், ஜோ ரூட் 76, பெயர்ஸ்ரோ 72 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தனர்.




நேற்று ஐந்தாம் நாள் ஆட்டம் தொடங்கியபோது, இருவரும் சிறப்பாக விளையாடினர். ரூட் தனது 28ஆவது சதத்தை அடித்து நம்பிக்கை கொடுத்தார். அவரைத் தொடர்ந்து பெயர்ஸ்ரோவும் 11ஆவது சதத்தைப் பூர்த்தி செய்தார்.

இந்த இருவரின் அதிரடியான ஆட்டமும் கைகொடுக்க இங்கிலாந்து அணி இலகுவாக வெற்றி பெற்றது. 76.4 ஓவர்களில் இங்கிலாந்து அணி 3 விக்கெட்களை மட்டும் இழந்து 378 ஓட்டங்களைக் குவித்திருந்தது.

ஜோ ரூட் 19 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 173 பந்துகளில் 142 ஓட்டங்களையும், ஜொனி பெயர்ஸ்ரோ 15 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 145 பந்துகளில் 114 ஓட்டங்களையும் குவித்தனர். (ஐ)

# விம்பிள்டன் ரென்னிஸ் சிமோனா காலிறுதியில்!

*லண்டன், ஜூலை 06*

விம்பிள்டன் ரென்னிஸின் காலிறுதி சுற்றுக்கு ருமேனியாவின் சிமோனா ஹாலேப் முன்னேறியுள்ளார்.

லண்டனில் நடக்கும் கிராண்ட்ஸ்லம் போட்டியின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற 4ஆவது சுற்றில் சிமோனா ஹாலேப், பௌலா படோசாவுடன் மோதினார்.

இந்தப் போட்டியில் ஹாலேப் 6-1, 6-2 என்ற நேர் செற்களில் படோசாவை வீழ்த்தி காலிறுதிக்குத் தகுதி பெற்றார்.

மற்றொரு போட்டியில் கஜகஸ்தான் வீராங்கனை எலெனா ரிபகினா, குரோஷியாவின் பெட்ரா மார்டிக்குடன் மோதினார். இந்த போட்டியில் மார்டிக்கை 7-5, 6-3 என்ற நேர் செற்களில் வென்று ரிபகினா காலிறுதிக்கு முன்னேறினார்.






# நால்வரை ஒப்பந்தம் செய்தது யாழ்ப்பாணம் கிங்ஸ் அணி!

*கொழும்பு, ஜூலை 06*

இந்த வருடம் நடைபெறவுள்ள லங்கா பிறீமியர் லீக் (எல். பி. எல்.) இருபது -20 கிரிக்கெட் 3ஆவது அத்தியாயத்தில் நடப்பு சம்பியன் யாழ்ப்பாணம் (ஜெப்னா) கிங்ஸ் அணி, 4 வீரர்களை முன்கூட்டியே தமது அணியில் பதிவு செய்துள்ளது.

எல். பி. எல். விதிகளுக்கு அமைய வீரர்களை அணிக்கு தெரிவு செய்யும் முறைமைக்கு முன்பதாக 2 உள்ளூர் வீரர்களையும் 2 வெளிநாட்டு வீரர்களையும் அணியில் இணைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய உள்ளூர் வீரர்களில் துடுப்பாட்ட சகலதுறை வீரர் தனஞ்சய டி சில்வா, இளம் சுழல்பந்து வீச்சு நட்சத்திரம் துனித் வெல்லாலகே ஆகிய இருவரும் முன்கூட்டியே யாழ்ப்பாமண் கிங்ஸ் அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு வீரர்களில் மேற்கிந்தியத் தீவுகளின் அதிரடி ஆட்டக்காரர் எவின் லூயிஸ், தென்னாபிரிக்காவின் வேகப்பந்துவீச்சாளர் ஹார்டஸ் வில் ஜோயன் ஆகிய இருவரும் முன்கூட்டியே அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் கிங்ஸின் வழமையான அணித் தலைவர் திஸர பெரேரா, அஷான் ரந்திக்க, சுழல்பந்து வீச்சாளர்களான மஹீஷ் தீக்ஷன மற்றும் பிரவீன் ஜயவிக்ரம ஆகியோர் தொடர்ந்தும் யாழ்ப்பாணம் கிங்ஸ் அணியால் தக்கவைக்கப்பட்டுள்ளனர் .

ஸ்ரீலங்கா கிரிக்கெட் சபையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 3ஆவது எல். பி. எல். தொடர் இந்த மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ளது.

# வீரர், வீராங்கனைகளுக்கு சமஊதியம் வழங்க முடிவு

## நியூசிலாந்து கிரிக்கெட் அறிவிப்பு

*ஹமில்டன், ஜூலை 06*

நியூசிலாந்து அணிக்காக விளையாடும் வீரர், வீராங்கனைகளுக்கு சம ஊதியம் அளிக்கவுள்ளதாக நியூசிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

ஆடவர், மகளிர் என இரு பிரிவாக கிரிக்கெட் போட்டிகள் விளையாடப்பட்டாலும் ஊதியம் வழங்கு வதில் நிறைய வித்தியாசங்கள் உள்ளன. பொதுவாக ஆடவர் பிரிவில் விளையாடும் வீரர்களுக்கு அதிக ஊதியம் கிடைக்கும். இதனால் இரு தரப்பினருக்கும் சமமான ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்று பல ஆண்டுகளாகக் கோரிக்கைகள் வைக்கப்பட்டு வந்தன.

இதையடுத்து வீரர், வீராங்கனைகளுக்கு சமமான ஊதியத்தை வழங்க நியூசிலாந்து கிரிக்கெட் சபை முன்வந்துள்ளது. இதன்படி டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் நியூசிலாந்து ஆடவர், மகளிர் அணியினருக்கு தலா 10,250 நியூசி. டொலர் ( 22 இலட்சத்து 56 ஆயிரம் இலங்கை ரூபாய்) வழங்கப்படும்.

இதேபோல, ஒருநாள் கிரிக்கெட்டில் விளையாடும் வீர, வீராங்கனைகளுக்கு தலா 4,000 நியூசி. டொலர் (8 இலட்சத்து 80 ஆயிரம் இலங்கை ரூபாய்), இருபது - 20 போட்டிக்கு 2,500 நியூசி. டொலர் (5 இலட்சத்து 50 ஆயிரம் இலங்கை ரூபாய்) இனிமேல் வழங்கப்படும் என அறிவித்துள்ளது.

ஒப்பந்தத்தில் அதிக தரவரிசை கொண்ட வீராங்கனை வருடத்துக்கு ஒரு இலட்சத்து 63 ஆயிரத்து 246 நியூசி. டொலர் (இலங்கை மதிப்பில் சுமார் 3 கோடியே 59 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய்) ஊதியமாகப் பெறுவார். ஆனால், இந்தத் தொகை ஆடவர் பிரிவில் அதிகம். அதிக தரவரிசை கொண்ட வீரர், வருடத்துக்கு 5 இலட்சத்து 23 ஆயிரத்து 396 நியூசி. டொலர் (இலங்கை மதிப்பில் சுமார் 11 கோடியே 52 இலட்சத்து 4ஆயிரம் ரூபாய்) பெறுவார்.

ஒகஸ்ட் 1 முதல் இந்தப் புதிய நடைமுறை அமலுக்கு வரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வணிக கப்பல் செயலகம் வெள்ளியில் மூடப்படும்

கொழும்பு, ஜூலை 06

வணிகக் கப்பல் செயலகம் வெள்ளிக்கிழமைகளில் மூட முடிவு செய்யப்பட்டுள்ளது.

நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, ஜூலை 8ஆம் தேதி முதல் பொதுச் சேவைகளுக்காக வணிகக் கப்பல் செயலகம் வெள்ளிக்கிழமைகளில் மூடப்படும்.

திங்கள், செவ்வாய், புதன் மற்றும் வியாழன் ஆகிய நாட்களில் சேவைகள் வழக்கம் போல் செயல்படும்.

(அ)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்: 51 பேருக்கு விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, ஜூலை 06

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக காத்தான்குடி பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட சஹறான் ஹஷீமின் பயிற்சி முகாமில் பயற்சி பெற்ற மற்றும் அவருடன் தொடர்பை பேணி வந்தது தொடர்பாக சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு தொடர்ந்து விளக்கமறியல் வைக்கப்பட்டிருந்த 51 பேரையும் எதிர்வரும் ஜூலை 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர் போல் நேற்று செவ்வாய்க்கிழமை காணொளி மூலம் குறித்த உத்தரவை பிறப்பித்துள்ளார். (அ)

# மரண அறிவித்தல்

மலர்வு 12 - 05 - 1955



உதிர்வு 01 - 07 - 2022

## மரியநாயகம் அந்தோனிப்பிள்ளை (அரியம்)

யாழ். ஊர்காவற்துறை கரம்பனைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Datteln ஐ வசிப்பிடமாகவும் கொண்ட மரியநாயகம் அந்தோனிப்பிள்ளை அவர்கள் 01.07.2022 வெள்ளிக்கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை லூறுது மேரி மாக்கிறேற் தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான சவிரிமுத்து மாக்கிறெட் தம்பதிகளின் பாசமிகு மருமகனும்,ராசமலர்(ஜேர்மனி) அவர்களின் அன்புக் கணவரும், மைக்நிக்சன்(ஜேர்மனி), நன்சி(ஜேர்மனி), சாறா(ஜேர்மனி) ஆகி யோரின் பாசமிகு தந்தையும்,ராஜ்மோகன்(ஜேர்மனி), அஞ்சலோ (ஜேர்மனி), நிசாந்தினி(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும்,ஜேடன், லியான், தியானா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான மரியநாயகம், றொபேட், கிறிஸ்ரி மற்றும் மலர்(கனடா), அருமை(கனடா), அரியமலர்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,ஆனந்தன்(கனடா), நேரு(கனடா), காலஞ்சென்றவர்களான மறிஸ்ரேலா, மாசில்லா மற்றும் சறோ(கனடா), பற்றிமா(கனடா), சவிரிமுத்து மரியதாஸ்(இலங்கை), காலஞ்சென்றவர்களான சவிரிமுத்து இம்மனுவேல், சவிரிமுத்து றோஸ்மலர் மற்றும் சவிரிமுத்து ஞானசீலன்(ஜேர்மனி), காலஞ்சென்ற சவிரிமுத்து பீற்றர் குணசேகரம், சவிரிமுத்து சந்திரசேகரன்(இலங்கை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

தொடர்புகளுக்கு:
**மைக்நிக்சன் - மகன்** Mobile : +4917685218180
**அருமை - சகோதரன்** Mobile : +16472969202
Phone : +19059709544

# கடற்படைச் சீருடையில் சென்று எரிபொருள் வாங்கியவர் கைது

கொழும்பு, ஜூலை 06

கடற்படையினரின் சீருடையுடன் சென்று 45 லீற்றர் பெற்றோலை பெற்றுக்கொண்டதாக கைதுசெய்யப்பட்ட முன்னாள் கடற்படை வீரர் ஒருவரை கம்பளை மாவட்ட நீதிமன்ற நீதவான் நாமல் பெரேரா ஒரு இலட்சம் ரூபாய் சரீர பிணையில் செல்ல அனுமதித்தார்.

கம்பளை அங்கம்மன பிரதேசத்தைச் சேர்ந்த முன்னாள் கடற்படை வீரர் ஒருவருக்கே இவ்வாறு பிணை வழங்கப்பட்டது.

தற்பொழுது நாட்டில் நிலவும் கடும் எரிபொருள் தட்டுப்பாட்டினால் பொது மக்கள் நாட்கணக்கில் வரிசையில் காத்திருந்து எரிபொருளினை பெற்று கொள்ளும் நிலையில் சந்தேக நபர் சில தினங்களுக்கு முன்னர் கம்பளை கண்டி வீதியில் அமைந்துள்ள எரிபொருள் நிலையத்திற்கு கடற்படைச் சீருடையுடன் வந்து கடற்படைக்குச் சொந்தமான படகு ஒன்றுக்கு தேவையெனக் கூறி கான் ஒன்றில் 45 லீற்றர் பெற்றோலினை பெற்று கொண்டுள்ளதாக தெரிய வருகிறது.

மேற்குறிப்பிட்ட சந்தேக நபர் கடற்படை ஒழுக்க விதி முறைகளை மீறி தன் சொந்த தேவைக்காக சீருடையுடன் வந்து பெற்றோல் பெற்று கொண்டமை தொடர்பாக தலாத்து ஓயா கடற்படை முகாம் பொறுப்பதிகாரிக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டையடுத்து அவர் கம் பளை பொலிஸாருக்கு வழங் கிய தகவலின் அடிப்படையிலேயே சந்தேக நபர் பொலிஸாரரினால் கைது செய்து கம்பளை மாவட்ட நீதி மன்ற நீதவான் நாமல் பெரேரா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

# எரிவாயு கப்பல் வருகை தாமதம்

கொழும்பு, ஜூலை 06

3,700 மெற்றிக் தொன் எரிவாயுவுடன் இன்று இலங்கைக்கு வரவிருந்த கப்பல் மூன்று நாட்கள் தாமதமாகும் என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி எதிர்வரும் 9ஆம் திகதி குறித்த கப்பல் இலங்கையை வந்தடையும் என லிட்ரோ நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். எதிர்வரும் 11 ஆம், 16ஆம் திகதிகளில் எரிவாயுவுடன் மேலும் இரண்டு கப்பல்கள் நாட்டுக்கு வரவுள்ளன.

உலக வங்கியின் அனுசரணையுடன் எதிர்வரும் காலத்தில் இலங்கைக்கு 100,000 மெற்றிக் டன் எரிவாயுவை இறக்குமதி செய்ய லிட்ரோ நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஜூலை 31 ஆம் திகதிக்குள் 33,000 மெற்றிக் தொன் எரிவாயுவை விநியோகிப்பதற்கு என எதிர்பார்க்கப்பதாக லிட்ரோ தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதன்படி, அத்தியாவசிய சேவைகள் மற்றும் வீட்டு எரிவாயு சிலிண்டர்களை தொடர்ச்சியாக வழங்க முடியும் என்று அவர் கூறியுள்ளார். (அ)

# நிர்வாக அதிகாரி படுகொலை பொலிஸாரால் கணவர் கைது

கொழும்பு, ஜூலை 06

கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு லங்காபுர பிரதேச செயலக தலைமை நிர்வாக அதிகாரி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் அவரது கணவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

லங்காபுர பிரதேச செயலக தலைமை நிர்வாக அதிகாரி கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கடந்த 4ஆம் திகதி கொலை செய்யப்பட்டிருந்தார்.

யமுனா பத்மினி என்ற 42 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு உயிரிழந்திருந்தார்.

இந்நிலையில், குறித்த பெண்ணின் கணவர் தற்போது பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (அ)

# கந்தக்காடு முகாமில் கைதி தாக்கப்பட்டே மரணமானார்

கொழும்பு, ஜூலை 06

கந்தக்காடு புனர்வாழ்வு முகாமில் உயிரிழந்த கைதியின் மரணம் தொடர்பான பிரேத பரிசோதனை அறிக்கை வெளியாகியுள்ளது.

மழுங்கிய ஆயுதங்களால் உடல் முழுவதும் தாக்கப்பட்டு ஏற்பட்ட காயங்களினால் மரணம் நிகழ்ந்துள்ளதாக பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 29ஆம் திகதியன்று கந்தகாடு முகாமில் இடம்பெற்ற மோதல் சம்பவமொன்றை தொடர்ந்து, கைதி ஒருவர் கொலை செய்யப்பட்டிருந்ததுடன், 500க்கும் மேற்பட்ட கைதிகள் தப்பியோடியிருந்தனர்.

பலர் கண்டுபிடிக்கப்பட்ட போதும், 50 பேர் வரையில் தொடர்ந்தும் தேடப்பட்டு வருகின்றனர். (அ)

# ஒலுவில் துறைமுகம் வேகமாக இயங்க வைக்கப்படுவதுபோல் மக்களின் வாழ்வாதாரப் பிரச்னைகளும் தீர்க்கப்படவேண்டும்

## கல்முனை சங்கரரட்ண தேரர் கோரிக்கை

அம்பாறை, ஜூலை 06

ஒலுவில் துறைமுகம் மிக வேகமாக அரசாங்கத்தால் மீள் இயங்க வைக்கப்படுவதை போல இந்நாட்டு மக்களின் வாழ்வாதார, பொருளாதார பிரச்னைகளையும் அரசாங்கம் மிக வேகமாக தீர்த்து தர வேண்டும் என்று கல்முனை சுபத்திராராமய விகாராதிபதி ரன்முத்துக்கல சங்கரரட்ண தேரர் தெரிவித்தார்.

கடற்றொழில் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பகீரத முயற்சியில் அஷ்ரப் ஞாபகார்த்த மீன்பிடித் துறைமுகம் - ஒலுவில் என்கிற நாமத்துடன் ஒலுவில் துறைமுகம் புதிய மலர்ச்சி பெறுகின்றது. இதை மீள இயங்க வைப்பதற்கான நிறைவுப் பணிகளில் சர்வ சமயத் தலைவர்கள், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். ஜெகதீஸன் உள்ளிட்ட உயரதிகாரிகள், மீன்பிடிச் சங்கங்களின் பிரதிநிதிகள், மீனவர்கள் ஆகியோர் கடந்த திங்கட்கிழமை காலை பங்கேற்றனர்.

இதில் புத்த சமய வழிபாடுகளை மேற்கொண்ட பிற்பாடு ஆற்றிய உரையில் ரன்முத்துக்கல சங்கரரட்ண தேரர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா துரிதமாக செயற்பட்டு இத்துறைமுகத்தை மீள் இயங்க செய்கின்றார். இத்துறைமுகம் கடந்து வந்த பாதைகளும், எதிர்நோக்கிய கஷ்டங்களும், முடங்கிப்போன கதைகளும் நாம் அறிந்தவைகளே. தற்போது அஷ்ரப் ஞாபகார்த்த துறைமுகம் என்கிற பெயரில் மீள் மலர்ச்சி பெறுகிறது.

பெயர் எதுவாகவும் இருக்கலாம். ஆனால் மூவின மக்களுக்கும் சொந்தமான வளமாக இத்துறைமுகம் விளங்க வேண்டும். இத்துறைமுகத்தின் பயன்பாடு அனைவருக்கும் கிடைக்க வேண்டும். கல்முனையில் அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை இருக்கின்றது. நானும் அவ்வைத்தியசாலைக்கு அடிக்கடி செல்பவன். சிறப்பான சேவை எல்லா மக்களுக்கும் அங்கு வழங்கப்படுகின்றது. அது போல இத் துறைமுகத்தின் சேவையும் இன, மத, மொழி பேதங்களை கடந்து பொதுவானதாக அமைதல் வேண்டும். நாட்டு மக்கள் இன்று பாரிய கஷ்டங்களை எதிர்கொண்ட வண்ணம் உள்ளனர்.

நாம் ஆட்சியாளர்களுக்கும், அரசாங்கத்துக்கும் ஆலோசனைகள் வழங்க தயாராக உள்ளோம். நாட்டு நலனுக்காக பிரார்த்தனைகள் செய்த வண்ணம் உள்ளோம்-என்றார். (அ)

## பாராளுமன்றத்து...

கள் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சபையில் தெளிவுபடுத்தி உரையாற்றிக் கொண்டிருந்தார்.

இந்நிலையில், எதிரணியினர் தமது ஆசனங்களிலிருந்து திடீரென எழும்பி 'கோ ஹோம் கோட்டா' என ஜனாதிபதிக்கு எதிராகப் பல்வேறு கோஷங்களை எழுப்பியும், பதாகைகளை ஏந்தியும் சபைக்குள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் சபையில் அமைதியின்மை ஏற்பட்ட நிலையில், பிரதமரின் உரை முடிவடைந்ததும் சபை நடவடிக்கைகளை 10 நிமிடங்களுக்குச் சபாநாயகர் ஒத்திவைத்தார்.

ஜனாதிபதியை நீண்ட நாட்களாக வெளியில் காணவில்லை என்றும், அவர் எங்கே இருக்கின்றார்? அல்லது அவர் உயிருடன் இருக்கின்றாரா? என்பதை யாவது அரசு கூறவேண்டும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. நளின் பண்டார, பாராளுமன்றில் நேற்று முன்தினம் அரசிடம் கோரியிருந்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாய்மூல விடைக்கான கேள்விகளின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும்போதே நளின் பண்டார எம்.பி. இவ்வாறு கோரியிருந்தார்.

இந்நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று பாராளுமன்றத்துக்கு வருகை தந்து அமர்வில் கலந்து கொண்டார். (அ)

## அனைத்து...

லிருந்து வெளியேறி சுயாதீனமாக இயங்கும் பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

இந்தக் கூட்டம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர,

"பல்வேறு தரப்பினரும் தங்கள் ஆலோசனைகளை முன்வைத்தனர். அனைத்து விடயங்களையும் ஒன்றிணைத்து, ஆராய்வதற்காக பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்லவை ஒருங்கிணைப்பாளராக நியமித்து, ஏனைய கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எவர் பிரதமராக வந்தாலும் தங்களுக்கு பிரச்னை இல்லை. முழுமையான தேசிய ஒருமைப்பாட்டுடனான வேலைத் திட்டத்துக்கு, முதலில் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில், தற்போதைய அரசாங்கத்துக்கு இந்தப் பிரச்னைகளைத் தீர்க்கக் கூடிய இயலுமை இல்லை - என்றார்.

## நாணய...

பொருளாதார மீளமைப்புக்கான வரைப்படம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச நாணய நிதியத்துடன் நடத்தப்பட்ட பேச்சுகள் அபிவிருத்தியடைந்து வரும் நாடாக இருந்து நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளாக இருந்தன. எனினும் தற்போது வங்குரோத்து நாடாக இருந்து பேச்சு நடத்தப்படுகிறது. இந்த நிலையில் கடன் மீளமைப்பு, மற்றும் பொருளதார ஸ்திரத்தன்மை என்பவற்றை சர்வதேச நாணய நிதியத்துக்கு சமர்ப்பிக்கவேண்டும்.

இதனையடுத்தே சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் திட்டத்துக்குச் செல்ல முடியும்.

அத்துடன் இந்தியா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவுள்ளன.

2023ஆம் ஆண்டின் இறுதியில் பணம் அச்சிடல் நிறுத்தப்படுவதற்கான தயார் நிலை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தநிலையில் நாடு, 2018 இன் நிலைக்கு செல்வதற்கு 2026ஆம் வருடம் வரையில் காத்திருக்க வேண்டும்.

இலங்கை அரசாங்கம் இந்த ஜூன் 3489 மில்லியன் டொலர்களை கடனாக செலுத்தவேண்டும். அத்துடன் 2023 முதல் 2026ஆம் ஆண்டு வரை 28 பில்லியன் டொலர்களை கடனாக செலுத்த வேண்டியுள்ளது.

இதேவேளை, ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க குறிப்பிட்ட பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியுமானால், அது நோபல் பரிசுக்கு உரிய திட்டமாக அமையும்-என்றார். (அ)

## ரணில்-சஜித்...

தலைவர் சஜித் வேலைகளைச் செய்ய முடியாத பிரதமரே ரணில் விக்கிரமசிங்க என்று குறிப்பிட்டார்.

அத்துடன், மாற்று அரசான எதிர்க் கட்சிக்கு ஆட்சியை ஒப்படைக்குமாறு கோருவதாகவும் கூறினார்.

இந்நிலையில், பிரதமர் பதிலளிக்கும் போது, எதிர்க்கட்சியினரிடம் முறையான வேலைத்திட்டங்கள் இல்லை என்றும், இருந்தால் முன்வைக்கவேண்டும் என்றும் கூறினார். அத்துடன் தன்னிடம் படித்தவர்களுக்கு ஆட்சியை எப்படிப் பிடிப்பது என்றும் தெரியவில்லை என்றும் ரணில் கூறினார்.

இதனைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட சஜித், "ரணிலிடம் நாங்கள் படிக்கவில்லை. எனது தந்தையே அவருக்கு அரசியல் கற்பித்துள்ளார். நாங்கள் எப்படி அரசியல் படித்து ரணிலைப் பூச்சியத்துக்குக் கொண்டு வந்தோம் என்று அவருக்குத் தெரியும்" - என்றார். (அ)

## ஜனாதிபதியும்...

கடந்த இரண்டரை வருட காலப் பகுதியில் அரசு எடுத்த தன்னிச்சையான மற்றும் தொலைநோக்கற்ற முடிவுகளே தற்போதைய குழப்பத்துக்கு வழிவகுத்துள்ளதாக தெரிவித்த கர்தினால் மல்கம் ரஞ்சித், தற்போதைய நெருக்கடியை தீர்க்கும் திட்டமோ தொலைநோக்கு பார்வையோ அரசிடம் இல்லை எனவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசின் மீது பொதுமக்களுக்கு கடுமையான வெறுப்பு உணர்வு இருப்பதாகவும், குறிப்பாக ராஜபக்சக்கள் தொடர்ந்தும் ஆட்சியில் இருப்பதால் அரசின் மீது நம்பிக்கை இல்லை என்றும் கர்தினால் கூறினார்.

பொதுமக்கள் இனியும் வேதனையில் இருக்க வேண்டாம் என்றும், அவர்களின் சரியான எதிர்காலத்தை மக்களுக்கு வழங்குமாறும் கர்தினால் மல்கம் ரஞ்சித் கேட்டுக் கொண்டார். (அ)

## சாதாரண,...

திகதி வரையான காலப் பகுதியில் நடத்துவதற்கு கல்வி அமைச்சு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த வருடத்துக்கான புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்வரும் நவம்பர் 27 ஆம் திகதி நடத்துவதற்கும், 2022 ஆம் ஆண்டு சாதாரண தரப் பரீட்சையை, 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மற்றும் மே ஆகிய மாதங்களில் நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

## பதவி விலக...

அவ்வாறான திட்டம் இருந்தால் அதனை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு இல்லாவிட்டால் பாராளுமன்றத்திலாவது முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அநுர குமார திஸாநாயக்கவினால் வழங்கப்படும் திட்டம் , சாதகமாக இருக்கும் பட்சத்தில், பிரதமர் பதவியை துறப்பதற்கு நான் தயார்." - என்றும் பிரதமர் குறிப்பிட்டார். (அ)

## பயங்கரவாத...

தமிழ் மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளை தொடர்வதற்கான ஒரு நகர்வாகவும் இது இருக்கலாம் என அவர் சந்தேகம் வெளியிட்டார்.

அதேவேளை, தமிழ் தேசிய இனப் பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (அ)

# நெல் பயிருக்காக பெற்ற கடனை தள்ளுபடி செய்கிறது அரசாங்கம்!

கொழும்பு, ஜூலை 06

உயிர்த்த ஞாயிறு தாக்குதல், பின்னர் ஏற்பட்ட கோவிட் - 19 பெருந்தொற்று நிலைமையால் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் மேலும் மோசமடைந்து வருவதுடன், பொதுவாக அனைத்து துறைகள் மீதும் நேரடியானதும் மறைமுகமானதுமான தாக்கங்களை ஏற்படுத்திய வண்ணமுள்ளது.

இந்நிலைமை ஒட்டுமொத்த சனத் தொகையில் 30 வீதத்தினரான விவசாயிகள் தாங்கிக் கொள்வதற்கு சிரமமாக இருப்பதுடன், இரசாயன உரப் பாவனைக்குப் பதிலாக இயற்கை உரப் பாவனையை அறிமுகப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தால் விவசாயிகள் மேலும் பல சிரமங்களுக்கு முகங் கொடுக்க நேர்ந்துள்ளது.

இந்நிலையில் நெற்பயிர்ச்செய்கைக்காக விவசாயிகளால் பெறப்பட்டுள்ள கடன்தொகையை மீளச் செலுத்துவதற்கு இயலாமல் போயுள்ளதுடன், குறித்த கடன்களை அறவிடமுடியாத கடனாக வங்கிகள் வகைப்படுத்தியுள்ளன.

இதனால், எதிர்வரும் பெரும்போக நெற்செய்கைக்குத் தேவையான கடன் தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு அதிகமான விவசாயிகள் தகைமையற்றவர்களாவதற்கு வாய்ப்புள்ளமையால், அரச தலையீட்டில் அவர்களுக்கு சலுகைகளை வழங்குவது அத்தியாவசியமாகவுள்ளது.

அதற்கமைய, இரண்டு ஹெக்ரெயர் அல்லது அதற்கு குறைவான காணியில் நெற்செய்கைக்காக அரச வங்கியிலிருந்து கடன் பெறப்பட்டு தற்போது மீளச்செலுத்துவதற்கு இயலாமல் போயுள்ள ஆரம்பக் கடன் தொகையை தள்ளுபடி செய்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# ரயில் சேவைகள் பாதிப்பு இன்று இரு மடங்காகும்!

கொழும்பு, ஜூலை 06

எரிபொருள் கோரி ரயில் பணியாளர்கள் முன்னெடுத்துள்ள ஆர்ப்பாட்டம் காரணமாக நேற்று இடம்பெறவிருந்த அலுவலக ரயில் சேவைகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டதாக ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ரயில் திணைக்களம் முறையற்ற வகையில் சேவையாளர்களுக்கு எரிபொருளை விநியோகிப்பதாக குற்றம் சுமத்தி ரயில் போக்குவரத்து சேவையாளர்களில் சிலர், நேற்று பிற்பகல் முதல் பணிப்புறக் கணிப்பை முன்னெடுத்துள்ளனர்.

அதேநேரம், கொழும்பு கோட்டை மற்றும் மருதானை ரயில் நிலையங்களின் அதிபர்கள் கடமைகளில் இருந்து விலகியுள்ளனர். தங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதுகாப்பு தொடர்பான பிரச்னை காரணமாக, அவர்கள் கடமைகளிலிருந்து விலகியுள்ளதாக ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரட்ன தெரிவித்துள்ளார்.

கடமைக்கு சமுகமளிப்பதற்காக தங்களுக்கு எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கு உரிய வேலைத்திட்டம் முன்னெடுக்கபடாமையால் ரயில் தரிப்பிட பணியாளர்கள் நேற்று காலை முதல் பணி புறக்கணிப்பை ஆரம்பித்துள்ளனர்.

இதன் காரணமாக, ரயில் நிலையங்களுக்கு அனுப்பப்பட்ட ரயில்கள் மாத்திரமே சேவையில் நேற்று ஈடுபட்டன. உரிய வேலைத்திட்டம் தயாரிக்கப்படாவிட்டால் நாளைய தினத்தில் (இன்றிலிருந்து) 2 மடங்காக ரயில் சேவைகள் முடங்கக் கூடும்.

இதனால் அரச இயந்திரம் ஸ்தம்பிக்கும் நிலை ஏற்படும் என ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரட்ன முன்னெச்சரிக்கை விடுத்துள்ளார்.

# எரிபொருள் நிலையங்களிலிருந்து முப்படையினரை விலக்க திட்டம்?

கொழும்பு, ஜூலை 06

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள முப்படையினரை அங்கிருந்து அகற்ற நேரிடும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கடமைகளில் ஈடுபட்டுள்ள முப்படையினரை அங்கிருந்து அகற்றுமாறு பல தரப்பினரால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இது தொடர்பில் இதுவரை இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என்ற போதிலும், அத்தகைய தீர்மானம் விரைவில் எடுக்கப்படலாமென பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எஸ். ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

சில அரசியல் செயல்பாட்டாளர்கள், பாதாள உலகக் குழுக்கள் மற்றும் கலவரக் குழுக்கள் என்பன பல்வேறு சம்பவங்களை முன்னிறுத்தி, எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குழப்பங்களை ஏற்படுத்தி வருகின்றமை தற்போது தெரியவந்துள்ளதாக அமைச்சின் செயலாளர் கூறியுள்ளார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்த போதுமானளவு பொலிஸார் இன்மையால், முப்படையினரின் ஒத்துழைப்பு பெறப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிவில் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை பொலிஸார் ஊடாக முன்னெடுத்து, தேவையான சந்தர்ப்பங்களில் மாத்திரம் முப்படையினரின் ஒத்துழைப்பை பெறுமாறு அனைத்து பிரிவினருக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

தற்போதைய எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் இத்தகைய அமைதியின்மை சம்பவங்கள் மேலும் மேலும் அதிகரிப்பதற்கான அபாயம் காணப்படுவதாகவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## மக்காவில்...

தலங்களின் பொது தலைமை தலைவர் அப்துல் ரஹ்மான அல்-சுதைஸ் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமிய நாட்காட்டியின்படி 12ஆவது மாதமான துல்ஹஜ் 9ஆம் திகதி அரஃபா நாள் கடைப்பிடிக்கப்படுகின்றது. இந்த நாளிலேயே இறுதித் தூதுவரான முஹமது நபிகள் அரஃபா மலையில் தனது இறுதிப் பிரசங்கத்தை நிகழ்த்தியிருந்தார் என்று நம்பப்படுகின்றது.

மக்காவில் உள்ள நிம்ரா மசூதியில் அரஃப தின உரை கடந்த 5 ஆண்டுகளாக அரபு அல்லாத உலகின் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு ஒலிபரப்பப்படுகிறது. ஆங்கிலம், பிரெஞ்சு, பாரசீகம், ஆபிரிக்க எனப் 10 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நிலையில் இப்போது தமிழும் உள்வாங்கப்பட்டுள்ளது. (ஐ)

## சைக்கிள் கையிருப்பு நிறைவு

கொழும்பு, ஜூலை. 06

நாட்டில் சைக்கிள்களின் கையிருப்பு நிறைவடைந்துள்ள நிலையில், விநியோகஸ்தர்கள் மற்றும் கொள்வனவாளர்கள் சிரமத்தினை எதிர்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நாட்டில் சைக்கிள்களின் விலைகள் அதிகரித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, தற்போது சந்தையில் சாதாரண சைக்கிள்கள் 60 ஆயிரம் ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், கியர் கொண்ட சைக்கிள்களின் விலைகள் 77 ஆயிரம் ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், சில விற்பனை நிறுவனங்கள் தவணைக் கட்டண அடிப்படையில் சைக்கிள்களை விநியோகிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மீதான தடையை அரசு உடனே நீக்கவேண்டும்

### செல்வம். எம்.பி. சபையில் கோரிக்கை



கொழும்பு, ஜூலை 06

**புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மற்றும் நபர்கள்மீது விதிக்கப்பட்டுள்ள தடையை இலங்கை அரசு நீக்கவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.**

**அத்துடன், தேசிய இனப்பிரச்னைக்கு தீர்வுகாண சிங்கள மக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும் பாராளுமன்றத்தில் நேற்று அவர் கோரிக்கை விடுத்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கை, டொலர்களை பெறும் நோக்கில் கட்டாரிலுள்ள தொண்டு நிறுவனமொன்றுக்கு விதித்திருந்த தடையை நீக்கியுள்ளது. இதனை வரவேற்கின்றோம். இதேபோல புலம்பெயர் தமிழர்கள்மீதான தடையும் நீக்கப்பட வேண்டும்.

இனவாத நோக்கிலேயே தடைகள் அமுலில் உள்ளன. அது உடைத்தெறியப்பட வேண்டும். அப்போது அவர்களும் இலங்கையில் முதலிடுவார்கள்.

இலங்கையில் இனவாதம் ஒழிக்கப்பட வேண்டும். ஜனாதிபதியை விரட்ட ஒன்றிணைந்ததுபோல இனப்பிரச்னையை தீர்க்கவும் மக்கள் ஒன்றுபடவேண்டும்- என்றார். (அ)

## உணவுப் பாதுகாப்புக் குழுவை நிறுவ அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜூலை. 06

வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உப குழுவை மீளமைத்தல் மற்றும் உணவுப் பாதுகாப்புக் குழுவை உருவாக்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

வாழ்க்கைச் செலவை நிலையாகப் பேணுவதற்குத் தேவையான கொள்கை ரீதியானதும் மற்றும் நடைமுறை ரீதியானதுமான தீர்வுகளை அமைச்சரவைக்குப் பரிந்துரைப்பதற்காக வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உபகுழுவை மீளமைப்பதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைய, வாழ்க்கைச் செலவு தொடர்பான உபகுழுக் கட்டமைப்பு கீழ்வரும் வகையில் அமையும்.

01. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ - தலைவர்
02. பிரதமர் ரணில் விக்ரமசிங்க
03. கடற்றொழில் அமைச்சர்
04. போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்
05. விவசாய அமைச்சர்
06. பெருந்தோட்டத்துறை அமைச்சர்
07. மின்சக்தி மற்றும் மின்வலு அமைச்சர்
08. வர்த்தகம், வணிகம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர்

அதேபோல், மேற்குறிப்பிட்ட வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உபகுழுவின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் லைமையில் மற்றும் குறித்த அமைச்சுக்களின் செயலாளர்களின் தலைமையில் உணவுப் பாதுகாப்புக் குழுவை நியமிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

## வல்வெட்டித்துறையிலிருந்து எண்மர் தமிழகம் சென்றனர்!



சென்னை, ஜூலை. 06

யாழ். மாவட்டத்தை சேர்ந்த மேலும் 8 பேர் அகதிகளாக தனுஷ் கோடியை சென்றடைந்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வல்வெட்டித் துறையை சேர்ந்த சேர்ந்த சசிகலா, கதிர், கமலா ராணி உள்ளிட்ட 8 பேர் ஒரு படகில் புறப்பட்டு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை 5 மணியளவில் தனுஷ் கோடியை அடுத்த அரிச்சல் முனை கடற்கரையில் இறங்கினர்.

தகவலறிந்த ராமேஸ்வரம் மரைன் பொலிஸார் இலங்கைத் தமிழர்களை மீட்டு மண்டபம் மரைன் காவல் நிலையம் அழைத்துச் சென்று விசாரணை நடத்தினர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளா தார வீழ்ச்சியின் காரணமாக அத்தியா வசியப் பொருட் களான அரிசி, பருப்பு, கோதுமை விலை அதிகரித்துள்ளது. அதேபோல் டீசல் மற்றும் பெற்றோல் விலையும் வெகுவாக உயர்ந்துள்ளது.

விலைவாசி ஒரு பக்கம் உயர்வு, மறுபக்கம் அத்தியா வசிய பொருட்கள் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது. 2 லீற்றர் மண்ணெண்ணெய் வாங்க 4 நாட்கள் வரிசையில் நிற்க வேண்டியுள்ளது,

தொடர் மின்வெட்டு அரசு மருத்துவமனைகளில் மருந்து தட்டுப்பாடு உள்ளது. மேலும் சமீப காலமாக வடக்கு மாகாண பகுதியில் பள்ளிக்குச் செல்லும் சிறுமிகள் கடத்திக் கொலை செய்யப்படுகிறார்கள். சிறுமிகளைக் கடத்தும் கும்பல் ஒன்று யாழ்ப்பாணத்தில் உள்ளதாக தகவல் வெளியானதையடுத்து பாதுகாப்பு தேடி இலங்கைப் பணம் தலா ஒருவருக்கு 1 லட்சம் ரூபாய் கொடுத்து படகில் தமிழகத்துக்கு அகதிகளாக வந்ததாக இலங்கைத் தமிழ்ப் பெண் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு வட்டார அதிகாரிகளின் விசாரணைக்கு பின் எட்டு பேரையும் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்பட உள்ளதாக மரைன் பொலிஸார் கூறினர். (அ)











## இன்றைய நெருக்கடியை தனித்து வெல்லமுடியாது

### ஹர்ஷ டி சில்வாவின் கருத்தை ஏற்றார் ரணில்

கொழும்பு, ஜூலை. 06

தற்போது இலங்கை சந்தித்துள்ள நெருக்கடியை தனித்து வெற்றி கொள்ள முடியாது என்ற ஹர்ஷ டீ சில்வாவின் கருத்தை தாம் ஏற்றுக் கொள்கிறார் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பெற்றோல் கப்பல் அல்லது டீசல் கப்பல்களை எடுத்து வந்து தற்போதுள்ள பிரச்னையை தீர்க்க முடியாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் நடந்த பேச்சுவார்த்தையின்போது அலுவலக மட்ட உடன்படிக்கை செய்து கொள்ளப்படவிருந்தபோதும், அந்த உடன்படிக்கை செய்துக்கொள்ளப்படவில்லை.

இந்த நிலையில் இந்த உடன்படிக்கை எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் செய்துகொள்ளப்படும் என்று கூறப்பட்டபோதும் அதனை எதிர்பார்க்க முடியாது என்று ஹர்ஷ டி சில்வா நேற்று பாராளுமன்றில் குறிப்பிட்டார்.

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் பணம் அச்சிடல் தொடருமாக இருந்தால் பணவீக்கம் 62 வீதமாக உயரும் என்று ரணில் விக்மசிங்க கூறியபோதும், உடனடியாக தீர்க்கப்படாவிட்டால், பணவீக்கம் 100 வீதமாக மாறும் என்று ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.



இதேவேளை, எதிர்வரும் ஜூலை மாதத்தில் கடன்களை மீளமைத்தால் அது பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் கின்னஸ் சாதனையாக இருக்கும் என்று ஹர்ஷ குறிப்பிட்டார்.

எனவே இந்த பிரச்னையை தனித்து தீர்க்க முடியும் என்று ரணில் விக்கிரமசிங்க நினைத்துப் பார்க்க முடியாது என்றும் ஹர்ஷ தெரிவித்தார்.

இதன்போது பதில் வழங்கிய ரணில் விக்கிரமசிங்க, பிரச்னையை தனித்து தீர்க்க முடியாது என்பதை தாமும் ஏற்றுக்கொள்கிறார் எனக் கூறினார்.

இதேவேளை, இந்தியாவிடம் இருந்து இந்த டிசெம்பர் வரை 5 பில்லியன் டொலர் வரை இலங்கைக்கு கிடைக்கவுள்ளதாக ஹர்ஷ டி சில்வா குறிப்பிட்டார்.

இதற்காக இந்தியாவுக்கு இலங்கை நன்றி செலுத்த வேண்டும் என்று தெரிவித்தார்.

இதற்கிடையில் 3 பில்லியன் டொலர்களை ஜப்பானிடம் இருந்து எதிர்பார்த்தபோதும் 3 மில்லியன் டொலர்களை மாத்திரமே பெறமுடிந்துள்ளது. எனவே சர்வ கட்சி அரசாங்கத்தின் மூலமே இந்த பிரச்னையை தீர்க்க முடியும் என்று ஹர்ஷ டி சில்வா குறிப்பிட்டார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.07.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றையராசி பலன்
7.05 மணி : உளநலம்-காசி ஜீவலிங்கம் (யாழ்பாவாணன்)



7.15 மணி : கதை வழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-ஆரோகணம்,அரவான் திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை

**இரவு**

07.00 மணி : பாரதீ



08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்-துரையப்பா தர்மானந்தசிவம்



09.30 மணி: பத்துக்கு 10
10.00 மணி : நேருக்கு நேர்

**DAN COMEDY HD**

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**ஓம் ரிவி**

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகேகோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**CHANNEL HOLY MARY**

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**Pirai Television**

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு